தனிப்பிரதி விலை | டன் காசு அணா
வெளிநாடு அணா

KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| ஆறு மாத சந்தா | ,, ... | ரூ 1-12 |
| வெளிநாட்டிற்கு | ,, ... | ரூ 4—0 |

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. ½
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 5 | ஈரோடு சுக்கில ஹு வைகாசி மீ 13 உ. (26—5—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 4

புத்தகம் 1-க்கு



## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றி யமையாத இன்பநூல்.
எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்
வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலைவீதி, சென்னை.

விலை ரூ. 2—0—0

(4-a)

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.


அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும் பரமானந்த சுறுசுறுப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரிக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு நயம், 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. டை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0 வி. பி. வேறு. சகல நோய்களுக்கும் ஸ்வானுபான அநுபான பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

(10) தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனா பஜார், மதராஸ்.

## முந்துங்கள்.

விலை ரூ. 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன் பெட்டி.



சாமான்களின் விபரம்


14 காரட் ரோல்டுகோல்டு அழகிய நிப்புடைய பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; டைசாட்டுப்பொத்தான்கள் செட் 12; டை கல்வைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; நேர்த்தியான கத்தி 1, காம்பினேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் கிளிப்புடன் கூடிய கவர் 1; பலரகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த நிப்புகள் 12; மணிபாக்ஸ் 1; ஜெர்மன் இங்கிபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; சென்ட் புட்டி 1; தேசிய டிரான்ஸ்பர்படங்கள் 32; அழகிய பலரக சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

தி. கிருஷ்ணா ஏஜன்ஸி

(4-c) தபால்பெட்டி 119 மதராஸ்.

ரூ. 2—14—0 ரூ. 2—14—0

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ, 2-14-0.

சனமுகன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
(4-d) ஜார்ஜ் டவுன், மதராஸ்.

## சுயமரியாதைத் தொண்டன்.

(வாரப்பதிப்பு)

| | |
|---|---|
| வருடசந்தா | 3—0—0 |
| வெளிநாட்டுக்கு | 4—0—0 |

இதன் ஆசிரியர், இ. சாமிநாதன்
விலாசம்:—
மானேஜர், "சுயமரியாதைத்தொண்டன்"
(f) பள்ளிபாளையம், (via) ஈரோடு.

## கைத்தொழில் முறைகள்.

1000 இரகசிய முறைகள் கொண்டது. சோப்புகள், மெழுகுவர்த்திகள், தீக்குச்சிகள், வார்னிஷ்கள், பிஸ்கத்துகள், பென்ஸில்கள், பலவித மருந்துகள் இன்னும் இதுபோன்ற 1000 எளிய முறைகள் கொண்டது. வேலையில்லாத் திண்டாட்டமுள்ள இக்காலத்தில் ஒவ்வொருவரிடமும் இந்நூல் இருக்கவேண்டும். 300 பக்கம் எறெப்ளேன் டிரேட் மார்க் உள்ளது ரூ1—8—0.

உடனே எழுதுங்கள்.

வாஸன் புஸ்தகசாலை,
244, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தைக் கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
(4-b) தபால் பெட்டி 119, மதராஸ்.

தங்க மெடல்கள் பெற்ற

## மலையாள நாட்டுத் துணிகள்.

இரணியல் சேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செலவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
(1) Travancore.

## 'குடி அரசு' புத்தகாலயம்

வேதப் புரட்டை வெளியாக்கும்,

| | |
|---|---|
| 'ஞான சூரியன்' 2-ம் பதிப்பு. | ... 0—8—0 |
| இராமாயணத்தின் ஆபாசம் பாலகாண்டம் | ... 0—4—0 |
| சுயமரியாதைப் பாடல்கள். | ... 0—2—0 |
| இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. | ... 0—2—0 |
| சுயமரியாதைத் தாலாட்டு. | ... 0—[illegible]—0 |

விலாசம்:—

மனேஜர், "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.

**உண்மையானது! உத்தரவாதமுள்ளது!!**



ஏழு தலைமுறைகளாய் கையாண்டனுபவம் வாய்ந்ததும், மஹாராஜாவின் அனுக்கிரகம் பெற்றதும், சித்தவைத்திய மகாநாடுகளிலும், கண்காட்சிகளிலும் மதிப்புப் பெற்றதுமான.

சிறந்த ஔஷதங்கள் எங்களுடையது.

பழநி; சி. எம். சாமி.

## குருதாம்பிர பஸ்பம்

தீரும் வியாதிகள்:—கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொறிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக் கடி, கடிவிஷங்கள், 8-ம் நீராம்பல், பெருவயிறு, மகோதரம், நீர்கவசை, குன்மம், அண்டவாய்வு, ஆனைக்கால், சூலை, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, கால் எரிச்சல், திரேகம் அழுகி துர்நாற்றமுடையவைகள், ஆணிப் புண்கள், குழிப்புண்கிராணி, கண்டமாலை பவுத்திரம் என்னும் அனேக கொடிய ரோகங்களை சீக்கிரத்தில் குணப்படுத்தும்.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50 50 வேளை ரூ. 25

ஏழைகளுக்குப் பாதிவிலை

நற்சாட்சிகளைக் கவனியுங்கள்

ஐயா, 8-வருஷமாக எனக்கிருந்த சர்மவியாதிக்கு பேர்பெற்ற அனேக டாக்டர்களிடம் அனேக மருந்துகள் சாப்பிட்டும் அதிகதொகை செலவழித்தும் தீராமல் தங்கள் குருதாம்பர பஸ்பத்தால் குணமடைந்தேன். உண்மையைக் கூறுமிடத்து 20 நாள் மருந்தில் கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டதுபோல் ஆனேன். தங்கள் மருந்து ஜாலவித்தைபோல குணம் தருகிறது. சலாம்.

முகம்மது, சியாம்ரோட் தவ்வாய் 8—9—28

2, தங்கள்குருதாம்பிர பஸ்பத்தால் எனக்கு 7 மாதகாலமாய் தீராதிருந்த மார்புக்குக்கீழ் சுண்டக்காய்ப்பிரமாண மிருந்த கொப்பளங்களும், புருடுகளும், மறைந்துபோய் திரேகத்தில் நல்லாத்தம் உண்டாகி உற்சாகமாயிருக்கிறேன். என் கஷ்டம் தீர்த்த தங்களுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன்,

ப. சோலைமலை, 72 செ. ஈளோஸ் தெரு ஈப்போ F. M. S. 23—7—27.

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்லாக்கில் பார்க்கலாம்.

பினுக்கு முதலிய அன்னிய தேசவாசிகள் ரூபாய் 5 அட்வசன்ஸ் அனுப்பவேண்டும்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்,

சி. மலையப்பசாமி நித்தியானந்த வைத்தியசாலை, பழனி S I


## பார்ப்பன அட்டகாசம்.

ஐயோ புரோகிதமே!


திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வைகுண்டம் தாலூகா பெருங்குளம் என்னும் ஊரிலிருக்கும் கருப்பன் பண்டாரம் மகன் ஐயாக்குட்டி பண்டாரம் அவர்களுக்கு பார்ப்பன புரோகிதமின்றிச் சுயமரியாதைத் திருமணம் நடந்தது. மறுநாள் மணமக்கள் பட்டணப் பிரவேச ஊர்வலம் வரும்போது அவ்வூ பார்ப்பனர்கள் தங்கள் தெருவில் ஊர்வலம் செல்லக்கூடாதென்று வீட்டிலுள்ள பெஞ்சு, கட்டில், நாற்காலி முதலிய சாமான்களைக்கொண்டு வந்து வழி மறித்து விட்டார்கள். ஊர் வலம் அவ்வழியே செல்லாமல் திரும்பி விட்டது. பின்னர் ஒரு வாரங்கழித்து கலெக்டர் உத்தரவின்பேரில் போலீஸ் பந்தோபஸ்துடன் அவ்வூர்வலம் அத்தெரு வழியாக நடத்தப்பட்டது. ஆங்கில ஆட்சியிலேயே இப்பார்ப்பனக்கூட்டம் இவ்வளவு திமிர் படைத்துள்ளதென்றால் காங்கிரஸ் பார்ப்பனர் கூவியழைக்கும் இராம ராஜ்யமென்னும் பண்டைய புரோகிதர் ஆட்சி வந்து விட்டால் மக்கள் வாழ்வு என்னவது?

(ஒரு நிருபர்)

நாகூர் திரு. சி. த. சூரிய மூர்த்திக்கும், மூலக்கரை திரு. முருகையா அவர்கள் திருவளர் செல்வி கமலாயபாளுக்கும் சென்ற 1—5—29-ல் பல எதிர்ப்புகளிடையே பார்ப்பனீயமொழிந்த திருமணம் சிறப்புற நிறைவேறியது.


எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனும்! இனும்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பேனாவுடன் பேனா இனும்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பேனாவுடன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜீனஸ் வாட்சு கம்பெனி,

(4-f) பிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

ஒட்டு பழச்செடிகள்! புதிய விதைகள்!!

3 வருஷம் வயதுள்ள பலஜாதி ஒட்டுமாஞ்செடிகளும், எலுமிச்சை, ஆரஞ்சு, மாதுளை, கொய்யா, பப்பளிமாஸ், குமட்டி மாதுளை முதலிய ஒட்டு செடிகளும் அநேக தினுசு ரோஜா, குரோட்டன்ஸ், புஷ்பச்செடிகளும் இருக்கின்றன. சீமை காய்கறி புஷ்பவிதைகள் தனித்தனியே 24 தினுசு செட் 1-க்கு ரூ. 2—8—0, டிை 12 தினுசு ரூ. 1—4—0, நாட்டுக் காய்கறி விதை 24 தினுசு செட் 1க்கு ரூ. 2—8—0, டிை 12 தினுசு ரூ. 1—4—0, படங்களுடன் காட்லாக் இனும். R. சுந்தரேச முதலியார்,

சந்திரா நர்சரி, சேலம் ஜங்ஷன்.

(8) தந்தி விலாசம்:—"சந்திரா"

# கனம். கோ. வடிவேல் செட்டியார் அவர்களுக்கு.

## கைவல்லியம் எழுதுவது

ஐயா, தங்களை எனக்குத் தெரியாது. தாங்கள் வேதாந்தி என்றும் திருக்குறளுக்கு உரைஎழுதினவர் என்றும் கேட்டதுண்டு. பலகாளாக வேதாந்தி என்றும் திருக்குறளின் உரைஆசிரியரென்றும் பெயரெடுத்த தாங்கள் சுயமரியாதைக்காரர்களை அறிவிலிகளென்று சொல்லுவதானல் நியாயத்தை நசுக்காமல் நடுநிலைக்கு நியாயம் கூறும் படிப்புதான் நம்நாட்டில் எது?

ஒருகாரியம் செய்வதற்கு மோக்ஷபுண்ணியத்தை விரும்பிச்செய்தாலொழிய வேறுவழியில்லை என்பதும், ஒவ்வொரு குறையையும் தெய்வம்தானே வந்துதீர்க்கவும் நடத்து காட்டவும் வேண்டுமென்பதும்தானு நமது சமயசாஸ்திர நிச்சயம்? யாரைக் குறைகூறுவது? மாமூல் கிழவி பலபண்டிதர்களை அபின்கொடுத்துப் பாதித்தூக்கத்தில் வைத்திருக்கிறுள். ஆனல் வேதாந்தப்படிப்பும் படித்து குறள் உரையும் செய்தபண்டிதரான தாங்களே அந்தக்கிழவியின் ஸ்துதியைப் பாடக்கேட்கும்போது ஆச்சரிய மிகுதியால் எனக்கு எழுத முடியாமல் போகிறது. ஆகா! இந்தக்கிழவி எத்தனை நல்லமருத்துவச்சி! இவள் கைக்குள் நமது தேசம் இருப்பது மகிமையன்ருே? இவள் மடியிலிருந்தபடியே சுயராஜ்ய செங்கோலும் கிடைத்துவிட்டால் எத்தனை நன்ருகவிருக்கும்.

வறுமையினுலும், வைதீகக்கொடுமையினுலும் கிஷ்டூரத்தினுலும் பலமாய்ப் பிடிக்கப்பட்டு கீழே வீழ்ந்து கிடக்கும் நமது லட்சக்கணக்கான ஜனங்களுக்கு ஒருசிறு நன்மையேனும் செய்ய முயல்பவர்கள்பேரில் பாய்வதற்கு வேதாந்தி என்னும் தாங்களுமா வந்துசேரவேண்டும்?

நீங்கள் பார்க்கிறபடி பல பண்டிதர்களுக்குள்ளிருந்துள்ள படிப்பைப்போலவேஜாதி துவேஷத்தினுல் கட்டப்பட்டு மூட பக்திமிகுந்து தங்கள் காரியத்திற்கு மட்டும் எல்லாம்கைக்கொண்டு மற்றதற்கெல்லாம் கடவுள் தலையில்போட்டு இரக்கமில்லாமல் முகஸ்துதி மலிந்து ஆஸ்திகக் கோழையாக ஜீவித்து வாழ்வதற்கு வேதாந்த சாஸ்திரமும் வந்ததல்லவே.

நம்தேசம் முன்னேற்றத்தில் வரவேண்டும். எளியவர்கள்போஷிக்கப்படவேண்டும். வடையில் வெங்காயமில்லை, லட்டில் கற்கண்டு பொடிகனமாய்விட்டது, பால்பாயசத்தில் பாலைக்குறுக்கவில்லை, தின்பண்டம் திகட்டாம லிருப்பதற்கு சட்டினி சரியாயில்லை என்று விவகரிக்கும் வயிறுநிறைந்தவர்களுக்குச் செய்யும் அன்னதானத்தால் யாதோரு பலனுமில்லை என்று எல்லாரும் தெரியவேண்டும் என்றும் வைதீகக்கொடுமை நீங்கப் படவேண்டும் என்றும் வைதீகக்கொடுமை உதவாது என்றும் சொல்லவந்திருக்கும் சுயமரியாதைக் காரர்களை தாங்கள்சமய சாஸ்திர புராண ஆராய்ச்சி சிறிதுகூட இல்லாதவர்களென்று சொல்லிவிட்டீர்கள். மிருக வாழ்க்கையிலிருந்த மற்றநாட்டிற்கு சமய உண்மைகளை யளித்த நம்நாடு கேவலமான நிலைமையைக்கண்டு வருத்தமும் படுகிறீர்கள். தாங்கள் குறிப்பிடும் மிருகவாழ்க்கை வாழ்ந்த ஐரோப்பாநாட்டில் முன் ஒருகாலத்தில் எல்லா விவகாரங்களிலும் பாதிரிகளுடைய அதிகாரம் மூர்த்தன்யமாக நடந்தது. எங்கும் வீசியிருந்த பாதரி வலையை அறுத்த பிறகுதான் ஐரோப்பியஜனங்கள் ஸ்வாராஜ்ஜியப் பாதையிலே கால்வைக்க இடமுண்டாயிற்று. இன்கிலீஷ்கோவில் பாட்டியைப்போல் முன்நடத்திய ஸர்வாதிகாரம் நீங்கி மாமூல் கிழவியை அசைத்து கோவிற்கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தலையை வெட்டித் தன் மதிப்பைக் காக்கக் கற்ற ஜாதியாரே தலை தூக்குவது இயல்பாயிற்று.

தாங்கள் சொல்லுவதுபோல நம்நாட்டு சமய உண்மைகள் அந்நாட்டிற்குப் போயிருந்தாலும் தொட்டாலும் பார்த்தாலும் கிட்ட நெருங்கினுலும்செத்து இந்த உடலை இங்கேயே போட்டுவிட்டு தெய்வலோகத்திற்குப்போய்விடுவதும் பின் நாம் ஆயிரக்கணக்காக செலவுசெய்து அந்தக்கடவுளின் முகத்திலிருந்து பிறந்த முதற் பிள்ளைகள் காலில் விழுந்தால்தான் விட்டுப்போன பழையதேகத்தில் புகுந்துசொன்னுவதுமேதொழிலாகவுடைய சுவாமியும் அதை சம்பந்தித்த சமயக் கொள்கைகளும் மேனுட்டுக்குப் போகவில்லை. ஆகையால்தான் மிருகமாயிருந்தவர்கள் மனிதர்களாகி தேவபோகங்களை யனுபவிக்கிருர்கள். அவையனைத்தும் நம் நாட்டிலே தங்கிவிட்டமையால்தான் மனிதராகவிருந்த நாம் மிருகமாகி வைத்த பொதியையெல்லாம் சுமக்கவும் தாங்கள் வருத்தப்படவும் காரணமாயிற்று.

நம் தேசத்தின் குலதெய்வம்-என்றும் விழித்திருக்கும் நித்தியதேவன் கருணைகூர்ந்து பார்த்து நம்முடைய ஜீவன் இப்போது குருக்கள் கட்டுப்பாடென்னும் சமயக் கொடுமைகளுக்குப் பயந்து குருட்டாசாரமென்ற தளைபூண்டு புழுதியில் கிடப்பதைநீக்கி அதன்சகஜ நிராகார நித்ய ஜயாமிருத ரூபமான ஆத்மசத்திய வழியின் ரூபத்தில் சேரும்படி கூப்பிட்டால் அங்கு பேர்கிறவர்களையோ போய்க்கொண்டிருப்பவர்களையோ தடுக்க சுயமரியாதைக்காரர்கள் வந்தவர்களல்ல.

அந்த ஈசனுக்கு ஜாதி, குலம், பந்தம் முத்தி பிறப்பு,இறப்பு, அருவம் உருவம், பெண்ஜாதிபிள்ளை எதயில்லை. எப்பொருளுக்கும் எவ்விடத்தும் அப் பொருளுக்கும் அவ்விடத்தும் அது எங்கும் எப்போது மிசையும். இதை நமது முன்னேர்கள் சொல்லியிருப்பதும் தெரியும். அறியாமையால் கட்டும், அறிவினுல் விடுதலையும் கைகூடுமென்பதை நமது முன்னேர் அறிவார் என்பதும் சுயமரியாதைக்காரர்கள் படித்ததுமுண்டு கேட்டதுமுண்டு

அந்த விதியைநாம் எத்தனைக்கெத்தனை ஸ்வீகரிக்கிருேமோ அத்தனைக்கத்தனை நமது பாதையிலுள்ளதடைகள் விலகும். அந்தத்தடைகளை விலக்கிக்கொள்ளவே பல சாஸ்திரபுராணங்கள் எழுதப்பட்டதின் ரகசியமென்று சொல்லுவதையும் கேட்டிருக்கிருேம்,எதெது நன்மையென்று சொல்லி வந்தோமோ அவையனைத்தும் தீமையாக மூண்டது கண்டோம். அவையனைத்தும் தெய்வத்தின் பெயர்சொல்லி மனிதனைமனிதன் அவமதிக்கும்படிசெய்து வைத்திருப்பதையும் பார்க்கிருேம். நம்மவரை நாமே இகழ்ந்து அவர்களை உலகமிகழ வைத்தால் அதைவிட பெரியகுற்றம் வேறு என்னவிருக்கிறது?

மெள்ள மெள்ளத்தான் சொல்லவேண்டும் பையப்பையத்தான் பக்குவம்-வருமென்று எல்லாருக்கும் படிப்பிக்கப்பட்டிருக்கிறது சரித்திரத்தில். சூரிய உதயம் வரும்பொழுது கிழக்கே ஒளி ஊர்ந்தூர்ந்து வராது பாய்ந்துவரும். எட்டுத்திசையை உடனே நிரம்பச்செய்யும். உலகத்து ஜாதியார் அங்குலத்திற்குமேல் அங்குலமாக நகர்ந்துதான் சொல்லவேண்டுமென்று விதிபோட்டிருந்தால் எந்தஜாதிக்கும் மேன்மைகேரிடாது. தகுதியுண்டானபிறகுதான்விரும்பலாமென்றுவிதிபோட்டால் எந்தஜாதிக்கும் விடுதலை உண்டாயிராது.

அந்த தெய்வத்தின் இயற்கை விதியின் ஒரு அம்சத்தை வசப்படுத்தி அதற்கு இயற்கை நூல் (சையின்ஸ்) என்று பேர் கொடுத்து இந்த சையின்ஸ் வலிமையாலன்ருே ஐரோப்பா தற்காலத்தில் பூமியில் பிணிக் காச்சல் இல்லாமல் செய்து விடுவேலை, யாவர் தன் வீடுகளில் சோற்றுப் பஞ்சமும் கல்விப் பஞ்சமும் இல்லாமல் செய்து விடுவேன், ராஜ்யத்தின் பொது நன்மையும், தனிமனிதனுடைய ஸ்வதந்திரமும் முரண்படாமல் செய்வேன் என்று துணிவுடன் கூறுகிறது.

அந்த தெய்வ விதியும், சமய உண்மைகளும் அன்னிய நாட்டார் மிருக வாழ்க்கையை அடைந்திருந்த காலத்தில் நம் நாட்டிலிருந்து பொலிற்றென்ற தாங்கள் சொல்லுகிறீர்கள். இப்பொழுது அதனுல் அவர்கள் ஒரே மூச்சில் 4500 மையிலைத் தாண்டி நம் நாட்டைக் கலக்கி மற்றொரு மூச்சில் அவர்கள் நாட்டில் குதித்து அங்கிருப்பவர்களை ஆனந்தப் படுத்துகிருர்கள்.

நம் நாட்டிலே அந்த தெய்வத்தின் விதியும் சமயக்கொள்கைகளும் ராம மந்திரமும் ஆல்போல் தழைத்து, அருகுபோல் வேர் ஓடி மூங்கில்போல் சுற்றும் முளைத்திருந்தும், உரை ஆசிரியரும், வேதாந்தப் பண்டிதரும் அறிவாளியுமான தங்களாலேயே மூக்கிற்கு முன்னுல் 12 அங்குலத்திலிருக்கும் எலுமிச்சம்பழத்தை ஆட்டவே ஆகுமென்ருல் அது உங்கள் பேரப்பிள்ளைகளுக்குப் பப்பிரமெண்டுக்குகூடப் பத்தாதே.

பாரமார்த்திகத்திற்குப் பன்னிரண்டங்குலம்போதுமென்று நினைத்தாலும் இவ்வாயிரக்கணக்கான வருஷங்களாகத் தேசமுழுதும் ஈஸ்வர நாமத்தினுலே ஆகாசத்தை நிரப்பிக்கொண்டும் தனது பிரார்த்தனைகளை ஈஸ்வரனிடத்துக்கு அனுப்பிக்கொண்டும் இருந்தும், ஈஸ்வரனே அவற்றிற்கு ஒருபொழுதும் செவி சாய்க்கிறதில்லை. அவர் ஏன் செவி சாய்க்கவேண்டும்? நம்மில் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வாழ்நாள் முழுதும் ஓங்காரத்தை தியானித்துக் கொண்டும், ராம நாமத்தினிடத்திலுள்ளபக்தியினுலே மெய்ம்மறந்து "உனது இஷ்டப்படியே நடக்கும். நான் உன்னிடத்தில் பரிபூரணமாக சரணுகதி அடைந்து விட்டேன்" என்று கூச்சலிட்டுக்கொண்டு இருந்தும் ஒன்றையும் அடையாமலிருப்பதை நீங்கள் பார்க்கவில்லையா? என் தருமத்தால் கருமம் பூரணப்பட்டு மனம் சுத்தியடையவில்லை. ஆனதால் தருமம் செய்யுங்கள், ஏழைகளுக்கே அந்தத் தருமம் உரித்தாகட்டும்,ஏழைகளுக்கும், நோய்வாய்ப்பட்டவர்களுக்கும் ஆலயங்கள் கட்டுங்கள், அதுவே ஈஸ்வரனுக்கும் பிரீதி என்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிருர்கள்.

தண்டவாளத்தை விட்டு நழுவினுல் அதன் எண்ணற்ற வண்டித் தொடர்கள் தடுமாறிப்போகும் என்பதுபோல் நமது சமயத்தத்துவங்கள் தருமமென்னும் தண்டவாளத்தை விட்டு நழுவிப் போயிற்று. இன்றில்லாவிட்டாலும் ஒருநாள் இது நரகக்குப்பையிலே சிதறிவிழும்போது வியாபாரச் சமயக்கொள்கைகளுக்கு பெரிய நஷ்டமானதடையாகும். இப்பொழுதுகூட அதன் அடையாளங்கள் தெரிகிறது. மனிதனுக்கு உணவு வேண்டும், அதை வைத்துண்ண பாத்திரங்களும் வேண்டுமென்பதை நாங்களும் அறிவோம். ஆனல் ஆகாரமே குறையுமிடத்தில் பாத்திரம் வாங்குவதிலே அதிகப்பணம் செலவிடக் கூடாது. ஒருவன் தன் பணமுழுதையும் கொடுத்துப் பணப்பைகள் விலைக்கு வாங்கும் மடமை போலாகும்.

எத்தனையோ வித ஈஸ்வர நாமம் நம்மிடத்திருந்தாலும் உலகத்தார்களின் சபைகளில் நம்முடைய கர்வம் சிறுமைப்படுகிறது. சமயக்கொடுமையால் நாம் பல நூற்றுண்டு செய்த பாவம் பெரும் சுமையாய் நமது மூடப்பழக்கவழக்கங்களையும் கூடத்தாங்கி நமது ஆண்மையை நசுக்கி நம்மதியை மயக்கிவிட்டது. அவற்றின் பெரும் சுமையைத்தள்ளி, எளிய ஒரு பெரும் முயற்சி செய்ய காலம் இதுவேயாம். நாம் முன்னே போகவொட்டாமல் இந்தச் சுமை பின்னே இழுக்கிறது. சென்ற காலப்புழுதியும் சருகும் புதியதை மறைக்கின்றது. நம்முடைய புதிய இளமைத் தோழி

(இதன் தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

# இதிகாசங்கள்.

## இராமாயணம்-ஆரண்ய காண்டம்

3-ம் கட்டுரை

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுகிறார்.)

அகம்பனன் என்பவன் ஓடிப்போய் இராவணனைக் கண்டு கரனாதியர் அழிவைக்கூறினான். விவரமறிந்த இராவணன் உடனேபோய் இராமனைக் கொன்று வருகிறதாகப் புறப்பட்டான். அகம்பனன் அவனைத்தடுத்து இராமனை அவ்வாறு சுலபமாக வெல்ல முடியாதெனக்கூறி இராமனுடைய மனைவியாகிய சீதையைத் தூக்கி வந்து விட்டால் இராமன் அவளிடம் உள்ள அன்பால் மடிவான் என்று சொல்லினான். அதற்காக இராவணன் தனியே போய் தாடகையின் மகனாகிய மாரீசனையடைந்து செய்தி கூற, அவன் இராவணனைத் தடுத்து அனுப்பினான். அதனால் இராவணன் திரும்பித் தன் நகரை யடைந்திருந்தான்.

அங்கே சூர்ப்பனகை வந்து தோன்றினாள். இராவணேச்சுரன் எல்லாவிதமான அரசஅங்கங்களிலும் நிரம்பப் பெற்றவனாய் பேரழகுடைய திருமேனியை உடையவனாய்விளங்கினான். அவன் மிகவும் நல்லவன். பிராமணர்கள் வேத மந்திரங்களால் யாகத்தைச் செய்து சோமரசத்தைக் குடிக்கும் சமயத்தில் அவைகளை அழிப்பவன். தேவதைகளுக்கு அவர்கள் கொடுக்கும் யாகத்தை நாசம்பண்ணி அவர்களைக் கொல்பவன். சூர்ப்பனகை இராமன் கரனாதியரைக் கொன்று விட்டானென்று கூற, இராவணன் "இராமன் யார்? அவனைப்பற்றிய செய்திகளைச் சொல்" என்றான். அவனையணுகி சூர்ப்பனகை கூறுகிறான், "அண்ணா! ஒற்றரால் செய்தியறிந்து கொள்ள முடியாத நீயும் அரசனா? நமது புகழ்க்குடி கெட்டது. தண்டகாரண்யத்தில் இராமன் இலக்குவன் என்ற வீரர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் முனிவர்களுக்கு வேண்டியவர்களாய் நம்மையெல்லாம் கொல்லத்துணிந்து முதலில் கரனாதியரைக் கொன்று விட்டார்கள். அவர்களுடைய மனைவி மிக அழகி. அவளை உனக்காகத் தூக்கி வரப் போனேன். அதற்காக என்னை இவர்கள் மான பங்கம் செய்து விட்டார்கள். வேண்டியதை விரைவில் செய்" என்றான்.

இராவணன் சீதையைத் தூக்கிவருவதே நலமென எண்ணி ஒருவருக்கும் தெரியாமல் தேரேறி மறுபடியும் மாரீசனைக் காணப்புறப்பட்டான். அவன் போகும் வழியில் ஒரு பெரிய ஆலமரம் இருந்தது. பல முனிவர்களுக்கு இருப்பிடமாகிய அம்மரத்தின் ஒரு கிளை முறிந்திருந்தது. அதற்குக்காரணம் முன்னொரு காலத்தில் கருடன் தின்பதற்காக ஒரு பெரிய யானையையும் ஆமையையும் எடுத்துக்கொண்டு வந்து அக்கிளையில் உட்கார்ந்தது. அக்கிளையின் கீழ் மாஷர்கள், அஜர்கள், புகை குடிக்கும் முனிவர்கள் முதலிய பலர் வாழ்வது கண்டு கருடன் அக்கிளையையும் தூக்கிக் கொண்டு போய் யானையையும் ஆமையையும் தின்று விட்டு அக்கிளையை வேடர்களிருந்த ஊரொன்றில் எறிந்து அவர்களை யழித்தது. அவைகளைத்தின்றதால் அது இருமடங்கு பலமான உடலைப்பெற்று விண்ணுலகடைந்து அமுதத்தை எடுத்து வந்தது. இவ்வாறாக கருடனால் கிளை முறிந்த அந்த ஆலமரத்தைப் பார்த்துக் கொண்டு இராவணன் மாரீசனை யடைந்தான். மாரீசன் அவனை வரவேற்று "இவ்வளவு விரைவில் திரும்பி வந்ததேன்?" என்று வினவினான். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

ஒப்புயர்வற்றவனாகிய இராவணேச்சுரனை சாதாரணமான ஒருவனைப் போலக் காட்டவேண்டியே அவன் அகம்பனன் சொன்ன போதும் பின் சூர்ப்பனகை சொன்னபோதும் மாரீசனிடம் போகிறான் என்று எழுதப்பெற்றிருக்கிறது. இதனால் அவன் தனக்கு இயற்கையான அறிவில்லாதவனைப் போல் காட்டப் பெற்றான்.

அவனைப் பற்றிச் சொல்லுமிடத்து அவன் பேரழகன், வல்லவன் என்று கூறி விட்டு வால்மீகி முனிவர் அவன் "பிராமணர்கள் வேதமந்திரங்களால் யாகத்தைச் செய்து சோமரசத்தைக் குடிக்கப் போகும் சமயத்தில் அவைகளை அழிப்பவன், தேவதைகளுக்கு அவர்கள் கொடுக்கும் அவிர்ப்பாகத்தை நாசம்பண்ணி அவர்களைக் கொல்பவன்" என்று எழுதுகிறார். இது நாம் முன் பாலகாண்ட அயோத்தியாகாண்ட ஆராய்ச்சிகளில் இடையிடையே குறித்து வந்த செய்திகளையெல்லாம் வலியுறுத்தும் சுரர்கள் என்பவர்களே ஆரியர்கள் அதாவது சுராபானம் பண்ணுகிறவர்கள். அசுரர்கள் என்பவர்கள் தமிழ்மக்கள், அதாவது சுராபானம் பண்ணாதவர்கள். சுரர்களாகிய ஆரியர்கள் காட்டுமிருகங்களைப் போல ஒருவரை யொருவர் அடித்துத் தின்று கொண்டும் காட்டு மிருகங்களைக் கொன்று தின்று கொண்டும் சுரை என்ற கொடியிலிருந்து கள் இறக்கி அதைக் குடித்துக் கொண்டும் திரிந்தார்கள். அவர் இந்திய நாட்டுக்கு வடக்கேயிருந்தவர்கள். அவர்கள் இந்தியாவில் புகுந்து குடியேறினவுடனே தமிழ் மக்களிடத்திலே இருந்த புலாலுண்ணாமை கள்ளுண்ணாமைகளாகிய சிறந்த குணங்களைக்கண்டு அவர்களுக்கு அசுரர்கள் என்று பெயர்வைத்து அழைத்ததோடு தாம் செய்து வந்த புலாலுண்ணல் கள்ளுண்ணல் ஆகிய தீய பழக்கங்களைத் தெய்வத்தின் பெயரால் செய்யத்தலைப்பட்டார்கள். அவைகளுக்கு யாகங்கள் என்று பெயரிட்டுக் கொண்டு பல வகைப்பட்ட மிருகங்களையும் கொண்டு வந்து சேர்த்து வெட்டி நெய்க்கொப்பரைகளிலே போட்டு அவித்து எல்லோரும் கூடியாடித் தின்று விட்டு சுரைக்கள்ளாகிய சுராவையும் குடித்தார்கள். அவர்கள் மனிதனைத்தின்ன எண்ணினால் நரமேதம் என்ற யாகம் செய்தார்கள், குதிரையைத் தின்ன எண்ணினால் அசுவமேதம் செய்தார்கள். இவ்வாறாக ஒவ்வொரு யாகமும்செய்தார்கள். இதனால் ஒவ்வொரு யாகத்திலும் மற்ற மிருகங்களும் அளவில்லாமல் கொலைசெய்யப் பெற்றன. ஆரியர்கள் ஒழுக்கமற்றவர்களாய் காட்டு மிருகங்களைப் போலவே அலைந்தார்களென்றோம். அவர்கள் ஆணும் பெண்ணும் கூடும் செயல்களில் ஒதுக்கமற்றவர்களாய் வெட்ட வெளிகளிலேயே பலரும் காண அச்செயல் புரிந்து வந்தார்கள். மிருகங்களுக்கு இதுவே செயலாவதன்றோ?

ஆரியர்கள் தமிழ் மக்களைக் கண்டபோது ஆண் பெண்சேர்க்கையில் சற்று ஒதுக்கம் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி உண்டாயிற்று. இதனால் சிலர்முன்னைய அறிவற்ற செயலை மறக்க மனமில்லாதவர்களானார்கள். அவர்களில் சிலர் அச்செயலுக்கும் தெய்வீகம் கற்பிக்கத் தொடங்கினார்கள். அதற்காக அவர்கள் பலரும் காண வேண்டு மென்று உயரமாக பரண்கள் அமைத்து அவைகளின் மேலே ஆண்களும் பெண்களும் சேர்ந்து ஆயிரக்கணக்கான மனிதர்களுக்கு முன்னிலையில் இன்பம் அனுபவித்தார்கள். சிலநாட்களின் பின்னர் அதிலும் கொஞ்சம் நாணம் தோன்றி மணமுறைகள் ஏற்பட்டு விதவைகள் மறுமணம் கூடாதென்ற ஏற்பாடுகள் தோன்றிய பின்னர் அவர்கள் இன்பநுகர்ச்சியில் பேராவலுடையவர்களாக இருப்பவர்கள் விதவைகளும் மணமாகாத விடலைகளும் ஆதலின் அவர்களைச் சேர்த்துப் பரணில் பல்லாயிரமக்கள் முன்னிலையில் கூட்டுறவுக்கு விட்டுக் காண வேண்டும் என்று ஏற்பாடுசெய்தார்கள். இந்த யாகத்திற்கு பௌண்டரீகயாகமென்றுபெயர் வைத்தார்கள். இவ்வேள்வியில் பரணின் கீழே நெய்விட்டு நெருப்பை வளர்த்திருக்கும். அத்தீயிலே பரணில் கூடுகிறவர்களுடைய சுக்கில சுரோணிதங்கள் விழவேண்டும், என்னே அறிவீனம்? அக்கினி தேவனுக்கு விதவை விடலைகளின் சுக்கில சுரோணிதங்களைத் தின்னுவதில் மிகவும் விருப்பம் போலும்? அக்கினி தேவனுடைய உணவுமிகவும்பாராட்டத் தக்கதே! இந்த யாகங்களைப்பற்றி எழுதவே நமது கை கூசுகின்றது; எண்ண நெஞ்சம் துணுக்குறுகின்றது. இவ்வாறாக இவைகளைச்செய்து மகிழ்ந்த மக்களின் அறிவையும் நாகரீகத்தையும் என்னென்பது? இன்னமும் அவர்கள் இத்தகைய யாகங்களை விட்டபாடில்லையே! நரமேதம் இக்காலத்தில் ஏட்டில்தான் இருக்கிறதே ஒழிய நடைமுறையில் இல்லை. ஏனெனில் அது செய்பவர்கள் தூக்கிலிடப் பெறுவார்கள் என்று ஆங்கில சட்டமிருக்கிறது. அதனால் அது நின்றுபோய் விட்டது. குதிரை முதலாய் மிருகங்களைத் தின்னும்யாகமும் காணப்பெறவில்லை. ஏனெனில் அம்மிருக உணவு உண்பவர்கள் உலகிலில்லை. ஆடுகளைக் காயடித்துக் கொன்று தின்னும் யாகங்கள் மட்டும் அளவிறந்தவை நடக்கின்றன. ஏனெனில் ஆட்டுப்புலால் உண்போர் பெரும்பாலோர் உளராதல்பற்றிப் போலும்!

சில ஆண்டுகளின் முன்னர் கல்விடைக்குறிச்சி கும்பகோணம் முதலிய இடங்களிலே பௌண்டரீக யாகம் நடைபெற்றதாம்! அறிவிற்சிறந்து நாடு முன்னேறும் இக்காலத்திலேயே இவ்வாறு வெறுக்கத்தகுந்த செயல்கள் நடைபெறுமேல் முன்னர் பண்டைக்காலங்களில் எத்தகைய இழி செயல்கள் நடைபெற்றிருக்கவேண்டும்?

மேலே விவரித்த இழி செயல்களைக்கண்ட பேரறிஞர்களாகிய தமிழ் மக்கள் வெறுத்தார்கள். அச்செயல்கள் நடைபெறக்கூடாதென நல்லறிவு கூறினார்கள். கேட்காது நடைபெறும் இடங்களில் சென்று தடை செய்தார்கள். அதிலும் முரண்பட்டவர்களைக் கொன்றார்கள். தமிழ் மன்னர்களும் இத்தடைச் செயல்களை முன்னின்று செய்தார்கள். இதுபற்றியே ஆரியர்களுக்கும் தமிழ் மக்களுக்கும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்தன. இச்சச்சரவுகளிலே யாகத்தை நடத்தும் ஆரிய ரிஷிகள் தமிழ் மக்களைப்பார்த்து பல்வாறு கோபத்தால் சீறி வைதார்கள். "ஏ இந்திரா! இவர்கள் எங்களைத் தடுக்கிறார்களே, இவர்களை உன் வச்சிராயுதத்தால் வெட்டு. ஏ அக்கினி! இவர்களைக் கொன்றுவிடு" என்று பலவாறு வைத வசவுகளும், அத்தெய்வங்களை அவர்கள் புகழ்ந்த புகழுரைகளும், வெறுக்கத்தகுந்த யாகங்களுக்குத்தான் வேதங்கள் என்னப்படும். இவைகளைத் தவிர ருக், யஜுர், சாமம், அதர்வனம் என்று சொல்லப்பெறும் வேதங்களில் வேறொன்றும் இல்லை. இவைகளிலுள்ள வாக்கியங்கள் பல காலங்களிலிருந்த பல ரிஷிகளாலே செய்யப்பட்டவை. இவைகள் சமஸ்கிருத பாஷையிலே இருப்பதனால் அதை அறியாத தமிழ் மக்களிடை இவ்வேதங்கள் கடவுளாலேயே செய்யப்பெற்றவை என்று பொய் புகன்றார்கள். இக்காலத்தில் உண்மையுணர்ந்தோர் கேட்கும் வினாக்களுக்கு இவ்வாரியப் பார்ப்பனர்கள் "வேதங்கள் ரிஷிவாக்கே யாயினும் ரிஷிகள் தெய்வத்தை நேரில் கண்டு தெய்வத்தன்மையை அடைந்தவர்கள் அதனால் அவர்களுடைய வாக்கு தெய்வ வாக்கு என்பதற்கு என்னதடை?" என்று தங்கள்பொய்யுரைக்குமேலும் பொய் புகன்று மழுப்புகிறார்கள். ஆட்டையும் மாட்டையும் அடித்துத் தின்றுகொண்டு பௌண்டரீக யாகம் செய்துகொண்டு சுராபானம் செய்து வெறியாட்டாடித்திரிந்த இந்த ரிஷிகளா தெய்வத்தன்மை பொருந்தியவர்கள்? உலகம் இப்போது நன்கு விழித்துக்கொண்

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.

## பட்டுக்கோட்டை

# சுயமரியாதைத் தொண்டர்கள்

### மகாநாட்டில் 25—5—29 தேதியில்

## உயர்திரு S. குருசாமி அவர்கள் நிகழ்த்திய

### தலைமைப்பேருரை.

"So long as the world is not perfect. a healthy society must have seeds of revolt in it"-Pandit Jawaharlal Nehru.

*அன்பார்ந்த சகோதரிகளே! சகோதரர்களே!!*

ஒரு நெருக்கடியான நிலையில் பெரும் பொறுப்புள்ள பதவியை எனக்கு அளித்திருக்கிறீர்கள். நான் இப்பதவிக்குப் பாத்திரனல்லவென்பதைநன்குணர்வேனாயினும் உங்கள் கட்டளையை மறுக்க மனமில்லாதவனாய் இதனை ஏற்றுக்கொண்டேன். எனக்கு உங்களுடைய பூரண ஆதரவை அளிப்பீர்களாக.

### வாலிபர்களின் கடமை.

எந்நாட்டின் முற்போக்கிற்கும் வாலிபர்களுடைய ஊக்கமும், உணர்ச்சியும், தியாகமுமே முக்கிய காரணங்களாக இருந்திருக்கின்றன. வாலிபர்களினால்தான் உலகம் முன்னேறமுடியும் என்பதற்கு அநேக சான்றுகளுண்டு. வயதுமுதிர்ந்த தலைவர்கள் எனப் படுவோர்களால் முடியாதென்று விட்டுவிடப்பட்ட காரியங்களையெல்லாம் வாலிபர்கள்தாம் முடித்து வெற்றிபெற்றிருக்கின்றார்கள். தொண்டர்கள்கூட்டம் அல்லது சங்கம் என்றால், தாங்கள் இருக்கின்ற நிலைமையைக்கொண்டே திருப்தியடைந்து விடாமல் முன்னேற்றத்தை உற்றுநோக்கி அதோடு கலப்பதற்கே ஒவ்வொரு நிமிஷமும் முயற்சிசெய்துகொண்டும் இருக்கவேண்டும். உலகம், (அதாவது நமது அர்த்தப்படி நம்மைச் சுற்றியுள்ள சமூகங்கள்) என்னசொல்லுமோ, பொதுஜன அபிப்பிராயம் (public opinion) எவ்வாறிருக்குமோ என்று யோசிப்பது இளமை என்னும் பெயருக்கே சிறப்பாக வாலிபர்களுக்கே மிக்க அவமானமாகும். இளைஞர்களாகிய நாம் தான் பொது ஜன அபிப்பிராயத்தை சிருஷ்டி செய்து வேண்டியதானமுறையில் திருப்பிக்கொள்ள வேண்டுமேயொழிய பொதுஜன அபிப்பிராயமென்ற தனியே ஒன்று இருப்பதாக எண்ணி அதற்காக நமது முயற்சியில் பின்வாங்கினால் அது மனித சமூகத்துக்கே ஒரு பெரிய பழி செய்வதாகும்.

### இதரநாட்டு வாலிபர்கள்.

இதர நாடுகளில் அரசியல், சமூக இயல், பொருளாதார இயல் முதலிய துறைகளில் இளைஞர்கள் செய்திருக்கும் அபாரமான புரட்சிகளை கவனிப்போமானால் நாம் வெட்கித் தலை குனியவேண்டிய நிலைமையிலிருக்கின்றோம். அயர்லாந்து, பிரான்சு, இத்தலி, ஜெர்மெனி, ருஷியா, துருக்கி, ஆப்கானிஸ்தானம், சைனா, ஈஜிப்ட், பர்சியா முதலிய எல்லாத்தேசங்களும் இப்போதிருக்கும் உன்னத நிலைக்குக்காரணம் அத்தேசங்களுடைய இளைஞர்கள் செய்த தியாகந்தானென்பதை ஞாபக மூட்டுகிறேன். ருஷியாவில் "ஜ்ஸார்" (Czar) காலத்தில் 100-க்கு 80 பேருக்கு மேல் படிப்பில்லாமலும், கிராமவாசிகளில் பெரும்பாலோர் அடிமைக்குழியில் அழுந்தியும் இருந்தகாலத்தில் ஸோவியட் (Soviet) கவர்மெண்டார் மாணவர்களையும் இதர வாலிபர்களையும் சேர்த்து சங்கங்கள் நிறுவிசெய்த தொண்டினால்தான் இன்றையதினம் அந்த ருஷியாவில் 100-க்கு 80 பேர் படித்திருக்கிறார்கள். இன்றையதினம் அந்த தேசத்தின் பெயரையும் கவர்மெண்டின் பெயரையும்சொன்ன மாத்திரத்திலேயே உலகமே நடுக்கிடுகிறது. சீனதேசம் அன்னியர்களிடம் அடிமைப்பட்டும் பழைய வழக்கங்களில் அழுந்தியும் சுயமரியாதை இழந்துநின்ற காலத்தில், அமெரிக்காவிற்கும் ஜப்பானுக்கும் சென்று படித்துத் திரும்பிய வாலிபர்கள் ஒரு பெரிய இளைஞர் இயக்கம் தோற்றுவித்ததனால்தான் சன்யாட்சென் (Sun-yat-sen) என்பவரைத் தங்களுக்குத் தலைவராக்கிக்கொண்டு, தெற்குச் சைனாவிற்கே ஒரு தேசிய இயக்கமாக ஆக்கி தேசத்தை அன்னியரிடமிருந்து மீட்டார்கள். ஜெர்மெனியின் கொடுமையான ஆட்சி முறையும், வீடு, பள்ளிக்கூடம் முதலிய இடங்களிலுள்ள சில பழைய கொடுமையான பழக்கங்களும் சட்டதிட்டங்களும் ஒப்புக்கொள்ள முடியாதபடியால், அத்தேசத்து இளைஞர்கள் தைரியமாக வெளிக்கிளம்பி காடுகளில் மாதக்கணக்காய் சஞ்சாரம்செய்து ஸ்வேச்சை ஜெர்மானிய வாலிபர் (Free German Youth) இயக்கம் ஆரம்பித்து, தங்களுக்கு கார்ல் பிஷர் (Karl Fischer) என்ற ஒருவாலிப உபாத்தியாயரைத் தலைவராக்கிக்கொண்டு, புரட்சி செய்ததால்தான், தங்களுடைய தேசத்திலுள்ள சமூகக் கொடுமைகளைப் பிளந்தார்கள். துருக்கியிலுள்ள புரோகிதக் கொடுமையும், மூட நம்பிக்கைகளால் மக்கள் படுந் துயரமும் பொறாமல், வாலிபர்களெல்லோரும் கிளர்ச்சிசெய்து வாலிப "துருக்கியர்" (Young Turk) இயக்கமென்று ஆரம்பித்து அதற்கு முஸ்தபாகமால் பாக்ஷாவைத் தலைமையாக ஏற்றுக்கொண்டு தைரியமாக புரட்சி செய்ததால்தான் 'ஐரோப்பாவின் வியாதி மனிதனா'க (Sickman of Europe) இருந்த துருக்கி இன்று ஐரோப்பாவின் சிகரமாக விளங்குகிறது. அயர்லாந்துக்கு அரசியலில் சுதந்திரம் கிடைத்ததெல்லாம் இளைஞர்களுடைய முயற்சியினால்தான் என்பது யாவரும் அறிந்த விஷயம். ஈஜிப்டுக்கு (Egypt) சுதந்திரம் கிடைத்ததற்குக் காரணம் அத்தேசத்தின் இளைஞர்களென்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான். இத்தாலியிலுள்ள (Fascist) இயக்கத்தின் காரணகர்த்தாக்கள் வாலிபர்களே என்பதும் அறிபற்பாலது. இன்னும் சமீபகாலத்தில் சீர்திருத்த மடைந்ததாகிய ஆப்கானிஸ்தானம், அந்நாட்டிலுள்ள இளைஞர்கள் மூடப் பழக்க வழக்கங்களை உதறித் தள்ளினதால் தான் என்பதை சமீபகாலத்தில் நாமெல்லோரும் பார்த்தோம். இன்னும் பார்த்தும் வருகிறோம்.

### சமூக சீர்திருத்தத்தின் அவசியம்

*சகோதரர்களே!*

இனி, சுயமரியாதைத் தொண்டர்களாகிய நாம் இங்கு கூடியிருக்கும் சந்தர்ப்பத்தைப் பற்றி கவனிப்போம். நீங்கள் இங்கே இவ்வளவு ஆர்வத்தோடும் ஊக்கத்தோடும் கூடியிருப்பது, வேடிக்கையாகவோ, அல்லது பொழுது போக்கிற்காகவோ கூட இல்லை என்பதை நான் நன்கு அறிவேன். இப்பொழுது இருக்கும் நிலைமையில், ஏதோ அதிருப்தி ஏற்பட்டிருப்பதால் தான் நாம் இங்கே கூடியிருக்கின்றோம்.

அரசியலிலும், சமுதாய இயலிலும் பொருளாதார இயலிலும் நம் நாட்டிற்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களுக்கு அளவேயில்லை. இந்த மூன்று துறைகளிலும் நமது நாட்டை விட அடிமையான ஒரு நாட்டைப் பார்க்க வேண்டுமானால் இனி புதிதாய்க் கண்டு பிடித்தால் தான் முடியும். ஆகவே, நம் நாட்டைப் போல் இருந்த மற்ற நாடுகள் எல்லாம் தங்கள் துன்பங்களை ஒழித்து விடுதலை பெற்று சுயமரியாதையுடன் வாழ முதலில் சமய சமுதாய உரிமைகள் பெற்ற பிறகு தான், அரசில் பொருளாதாரம் முதலிய உரிமைகளைப்பெற்றிருக்கின்றன வாகையால், என்னைப் பொருத்த வரையில், நமது நாட்டிற்கு இது போது சமைய சமூக உரிமையே எல்லாவற்றினும் பிரதானமென்று கருதுகிறேன். அதற்கேற்றுப்பேல்.

### ஒரு நல்ல சந்தர்ப்பம்.

முதலாவது சுயமரியாதை மகாநாடு செங்கற்பட்டில் கூடிய 3-மாத காலத்திற்குள் இந்த நகரில் தொண்டர்கள் மகாநாடு கூட்டிய அவசியத்தை நான்நன்குணர்வேன் செங்கற்பட்டு மகாநாடு தென் இந்திய சரித்திரத்தில் ஒரு முக்கிய நிகழ்ச்சி என்றே இந்த சந்தர்ப்பத்தின் இச்சீரிய உணர்ச்சிக்கே காரணகர்த்தாவாகவும் தலைவராகவும் இருக்கும்பெரியார், திருவாளர் ஈ. வெ. ராமசாமியாரைக் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை. செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்கள் மக்களை எவ்வளவு தூரம் நீண்ட உறக்கத்தினின்றும் தட்டி எழுப்பியிருக்கின்றன என்பதும் நம் தமிழ்நாட்டு நடைமுறைகளைக் கவனிப்போருக்கு விளங்காமல் போகாது. நமது நாடு முற்போக்கடையாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் இங்குள்ள சமூகக் கொடுமை தான் என்பதை அனுபவ வாயிலாக அறிந்து நமக்கு

-டுத்துக்காட்டிய பெரியார் திரு. ராமசாமியவர்களுக்கு இளைஞர் உலகம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறது. உண்மையுணர்ச்சியோடும், அதன்படி செய்கையில் நடத்தக்கூடிய தைரியத்தோடும் நமது பெரியாரைப்போல் ஒரு இளைஞர் புறப்பட்டு விட்டாலும் அது ஒன்றே பெரிய வெற்றியைக் கொடுத்து விடும். நம்மை விட முதியோர்கள் பல ஆசைகளால் கட்டுப்பட்டு குடும்ப இன்னல்களால் பிணிக்கப்பட்டு, தைரியமிழந்து வாழவேண்டிய நிலையிலிருப்பவர்களாதலால், மேற்கண்ட ஒரு விதத் தடைகளுமேயில்லாத நம் போன்ற தொண்டர்கள் தான் ஏதாவது செய்கையில் செய்ய இயலும் என்பதை உறுதியாக நம்புங்கள்.

### உரிமையைப்பெற உயிரையும் விடவேண்டும்.

உலக சரித்திரம் முழுவதிலும் 'சுயேச்சை' அல்லது 'உரிமை' பிறரிடம் கேட்டு வாங்கினதாக ஒரு உதாரணம் கூட கிடையாது. நமது உரிமைகளைத் திருடி வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் நாம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருப்பது மிகுதியும் அறிவீனமாகும். ஒன்று நமது உரிமையை பலவந்தமாய் பிடுங்கிக் கொள்ள வேண்டும் அல்லது அதற்காக உயிரை இழக்க வேண்டும். இவ்விரண்டிற்கும் மத்தியிலுள்ள வாழ்க்கை மானமற்ற வாழ்க்கையேயாகும்.

### மதம்.

உலகத்திலே மனித சமூகத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தடையாயிருப்பது மதம் தான். முன்னேற்றத்தின் முதற்படியில் காலை எடுத்து வைக்கும் போதே மதம் என்னும் "பேய்" தான் காலை இழுத்துத் தள்ளி விடுகிறது. இந்தப் "பேயை" எதிர்க்கத் துணிவு கொண்டவர்களுக்குத் தான் மேலே செல்ல சாத்தியப்படும். ஐரோப்பாவில் மார்டின் லூதர் (Martin Luther) ஸ்விங்கிளி (Zwingli) கால்வின் (Calvin) வைக்கிளிப் (Wycliffe) ஜான் ஹஸ் (John Huss) முதலானவர்கள் கிருஸ்து மதத்தை எதிர்க்க ஆரம்பித்த பிறகு தான் ஐரோப்பாவிலுள்ள ஒவ்வொரு சிறிய தேசத்திற்கும் சுயேச்சையுணர்ச்சியேற்பட்டு, நாளடைவில் உரிமையை நிலை நாட்டிற்று. அது வரையில் அதாவது, கிருஸ்து மதத்திற்கு எதிர்ப்பாகிய (Protestant) மதம் ஆரம்பிக்கும் வரையில் அதாவது 'கிருஸ்து'வுக்குப் பின் சுமார் 1500 ஆண்டுகள் வரையில், ஐரோப்பாவிலுள்ள எல்லா நாடுகளும் உரிமையற்று தாழ்மையான நிலையில் தான் இருந்தன. மத எதிர்ப்புகள் தோன்றிய இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகளுக்குள் தான் எல்லா நாடுகளும் சுயேச்சை பெற்றிருக்கின்றன. இது என்னுடைய சொந்த அபிப்பிராயமல்ல, உலக நிகழ்ச்சிகளில் கண்ட உண்மையைத்தான் சொல்கிறேன். மதம் என்னும் சட்டதிட்டங்கள் மனிதனுடைய வாழ்க்கை நலத்திற்காக, மனிதனே ஏற்படுத்திக் கொண்டது என்பதையும் அதை சமயோஜிதம்போல் தேசவர்த்தமான காலத்திற்கேற்றவாறு திருத்தியோ, புதுப்பித்தோ, அமைத்துக்கொள்ளலாம் என்பதையும் அறியாத மனிதஜென்மங்களால் தான் நமது நாடும் மக்களும் இழிவாகக் கருதப்படுவதுடன் மிஸ் மேயோ சொன்னதில் குற்றமொன்றுமில்லை யென்றும் தோன்றுகிறது. அறிவுக்கும் உடல் நலத்திற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் பொருத்தமில்லாத பழைய குப்பைகளையும் அர்த்தமற்ற சட்டதிட்டங்களையும் எதிர்த்து உடைக்கமுடியாதநாம், துப்பாக்கி, பீரங்கி, கப்பற்படையோடு கூடிய ஒருகூட்டத்தை எதிர்க்கப்போகிறோமா என்பதும் அது வீண் ஏமாற்ற வார்த்தை என்பதும் லார்ட் பர்கன் ஹெட்டுக்குத் தெரியாமல் போகுமா? 6 அங்குலமுள்ள தர்ப்பைக்குப் பயந்து அடிமையாயிருக்கும் நமது நாடு, 20 மைல் பாயும் பீரங்கிமுன் பூரண சுயேச்சைக்காக உயிரைவிட சித்தமாயிருக்கின்றதென்றால், இந்த இருபதாம் நூற்றாண்டில் அதைநம்பி ஏமாறக்கூடியவர்கள் யாராவது இருப்பார்களாவென்றுதான் கேட்கின்றேன். பெருமிப்



பட்டுக்கோட்டை சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாட்டுத் தலைவரும் 'ரிவோல்ட்' உதவி ஆசிரியருமான உயர்திரு. S. குருசாமி அவர்கள்.

பெயரோடு, அர்த்தமில்லாத, ஆதாரமில்லாத கட்டுக்கதையாக இருக்கின்ற ஒரு மதத்தை ஒரு பெரிய சமூகத்தையே பாழ்படுத்தும்படி மூட பயத்தினால் விட்டுக்கொண்டு இருக்கின்ற 21 கோடி மக்கள் பூரண சுயேச்சைக்கு உயிரைவிடப் போகின்றார்கள் என்றால் உலகத்தார் சிரிப்பார்களென்றாவது யோசிக்கவேண்டாமா? ஆகவே அப்பேர்ப்பட்ட மதத்தை எதிர்க்கவேண்டிய தைரியத்தைக்கொடுத்த இயக்கமாகிய சுயமரியாதை இயக்கத்தின் தொண்டர்களாகிய நாம் மேலே இனிச்செய்யவேண்டியது என்ன என்பதைப்பற்றி நிச்சயித்துக்கொள்ளவேண்டியது நமது கடமையல்லவா? இனி மதத்தை எதிர்ப்பதால் வரும் இன்னல்களைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லவேண்டிய அவசியமிருக்கிறது. முதலாவதாக, நமது பெற்றோர்களும் உற்றார் உறவினர்களும் வீட்டில் நமக்கு எதிரிகளாகத் தோன்றுகிறார்கள். அவர்கள் 'பழக்கம்' என்ற வியாதிபிடித்து நரங்கிக்கொண்டிருப்பதால் அவர்களை லக்ஷியம் செய்யாமல் நமது பிரசாரத்தாலும், நடத்தையாலும் அவர்களாகவே நம்மைப் பின்பற்றும்படியான நிலைமை ஏற்படுத்திவிட வேண்டும். அதனால் வரும் இடையூறுகளை அனுபவிப்பதற்கும் நாம் தயாராகத்தான் இருக்கவேண்டும். இரண்டாவது எதிரிதான் அரசாங்கம். நம்முடைய சமூகமுன்னேற்றத்தை அரசாங்கத்தார் எவ்வளவுக்கெவ்வளவு தடைப்படுத்தி வைக்கிறார்களோ அவ்வளவுக்கவ்வளவுதான் அவர்களுக்கு லாபமுண்டு. நம்மை மூடர்களாக்கி வைத்திருக்கும் வரையில் நம்மையாளுவது மிக சுலபம். சமூக முன்னேற்ற உணர்ச்சி அதிகப்பட்டுவிட்டால் அரசியல் சுயேச்சை உணர்ச்சியும் தோன்றிவிடும் என்று தெரிந்தல்லவா மதத்தில் தாங்கள் பிரவேசிப்பதில்லையென்று சாக்குச் சொல்லுகிறார்கள். ஆகவே, சமூக முன்னேற்றத்தில் புரட்சிசெய்ய ஆரம்பித்தால் அரசாங்கத்தாருடைய விரோதமும் தண்டனையும் இப்பொழுது இல்லாவிட்டாலும் எப்பொழுதாவது வந்தே தீரும். இதற்கு பயப்படுகிறவர்களும் நமக்குத் தேவையில்லை.

### கடவுள்.

மதம் என்ற சொல்லைவிட அதிகமாகப் பயமுறுத்த உபயோகப்படுகின்ற வார்த்தை தான் 'கடவுள்.' இதைப்பற்றி உண்டு என்று வாதிப்பவரோ இல்லையென்று வாதிப்பவரோ இருவரும் சோம்பேறிகள் என்பதே தமியேனுடைய கருத்து. இந்தச் சந்தர்ப்பத்தில் புத்தர் பெருமானின் சொற்கள் ஞாபகத்திற்கு வருகின்றன. உலக துன்பங்களின் காரணத்தைப்பற்றி அவர் கூறியிருக்கும் வார்த்தைகளாவன:—

"How can it be that Bramha
Would make a world and keep it miserable
Since if all powerful, he leaves it so,
He is not good and if not powerful,
He is not God!"

அதாவது, "பிரமா என்பவர் உலகத்தை சிருஷ்டி செய்து அதைத் துன்பத்திலாழ்த்தியிருக்கமுடியுமா? (முடியாது). ஏனெனில், சர்வ வல்லமையுடையவராயிருந்து இப்படிச் செய்திருந்தால் அவர் தயாபரர் அல்ல. சர்வ வல்லமை இல்லாதவராயிருந்தால் அவர் கடவுள் அல்ல" என்பதாகும்.

கடவுள் என்ற பெயரைச் சொல்லிக்கொண்டுதான் பஞ்சமாபாதகம் செய்கிறவர்களும் வாழ்க்கையை நடத்துகிறார்கள். அவர்களைக் கடவுள் அப்போதைக்கப்போது தண்டிக்காததால் அவ்வக்கிரமங்களை கடவுள் ஒப்புக்கொண்டதாகவே வைத்து மேலும் மேலும் அதே காரியங்களைச் செய்கிறார்கள். ருஷியாவைப் பற்றி எழுதியிருந்த ஒரு புத்தகத்தில் 'கடவுள்,' 'தலைவிதி' என்கின்ற சொற்கள் இளைஞர்களுடைய ஊக்கத்தையும், முயற்சியையும் கெடுப்பதால் அவைகளைப் பெயரளவில்கூட உபயோகிக்கக்கூடாது என்ற சட்-

(இதன் தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.)

## பூரண சுயேச்சை இயக்கமும் திரு. சீனிவாசையங்காரும்.

திரு. எஸ். சீனிவாசையங்கார் இந்த வருஷத்திய தேர்தலுக்கு ஒரு புதிய தந்திரம் கண்டுபிடிக்கவேண்டிய அவசியத்தின்மீது எல்லா அரசியல் கொள்கைகளையும்விட தீவிரமாய் இருக்கவேண்டும் என்கின்ற ஆத்திரத்தின்மீது பூரண சுயேச்சையே தமது அரசியல் கொள்கை என்று வெளிப்படுத்திக்கொண்டார். கல்கத்தா புரட்சி இயக்க உணர்ச்சி கொண்டால் செல்வாக்குப் பெறலாம் என்று கருதிய திரு. சுபாஷ்சந்திரபோசும் சமீபத்தில் ருஷியாவில் சுற்றுப் பிரயாணம் செய்ததின் பயனாய் சமத்துவ உணர்ச்சி கொண்டால் செல்வாக்குப் பெறலாம் என்று கருதிய திரு. ஜவாரிலால் நேருவும் திரு. சீனிவாசையங்காரையும் அவரது பூரண சுயேச்சைக் கொள்கையையும் நம்பி இவருடன் சேர்ந்தார்கள்.

ஆனால் திரு. சீனிவாசையங்கார் பூரண சுயேச்சைக் கூப்பாட்டிற்கு தமிழ்நாட்டில் யோக்கியதை இல்லை என்பதையும் அரசாங்க அடக்குமுறையின் வேகத்தையும் தெரிந்துதான் பூரண சுயேச்சை இயக்கத் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். அதோடுகூடவே இனியும் ஒரு புதிய இயக்கத்தை ஆரம்பிக்கப் போவதாகவும் சொல்லி இருக்கிறார். இவர் தொட்டது துலங்காது என்றிருந்தாலும் என்றைக்கிருந்தாலும் ஓட்டர்களை ஏமாற்ற ஏதாவது ஒரு புரட்டு வேண்டியிருப்பதால் திருவாளர்கள், வரதராஜுலு கல்யாணசுந்தரம் ஆகியவர்களுடன் சேர்ந்து ஏதாவது ஒரு கொள்கையை வெளிப்படுத்துவார். ஏனென்றால் சீனிவாசையங்கார் கூப்பிட்டபோது ஓடவும், வேண்டுமென்று கூப்பிட்டவுடன் ஓடிவரவும் அய்யங்கார் வார்த்தையை "வேதவாக்காக"க் கொண்டு பிரசாரம் செய்யவும் தமிழ்நாட்டில் இந்த இரண்டு கனவான்கள்தான் உண்டு. மற்றபடி இப்போது அய்யங்கார்கூட இருக்கும் எந்தப் பார்ப்பனரல்லாதாரும் அய்யங்காரை விட்டுப் பிரிந்து மறுபடியும் அவருடன் சேருவதானால், மானம் ஈனம் சுயமரியாதை என்பவைகளைப் பற்றி சற்றுவது யோசித்துப்பார்ப்பார்கள். ஆனால், மேல்கண்ட இரண்டு கனவான்களுக்கும் இந்த விஷயங்களில் சிறிதுகூட கவலை கிடையாது. ஏனென்றால் முற்றத்துறந்த ஞானியிடம் மானம் ஈனம் இருக்க இடமேது?

## ஈ. வெ. இராமசாமி அவர்களின் சுற்றுப பிரயாணம்.

திரு. ஈ. வெ. ராமசாமி அவர்கள் 19-5-29 ௳ ஈரோட்டினின்றும் புறப்பட்டு உதகமண்டலம் சென்றுவிட்டு 21-5-29௳ ஈரோடு வந்துசேர்ந்தார்கள். மறுபடியும் 24-5-29 ௳ இரவு தமது மனைவியார் ஸ்ரீமதி நாகம்மாள் அவர்களுடன் பட்டுக்கோட்டைக்குச் சென்றிருக்கிறார்கள். 27-5-29௳ வாக்கில் ஈரோடு வந்து சேர்வார்கள்.

## மாளவியாவின் பித்தலாட்டம்

திரு பண்டிதர் மதன்மோகன மாளவியா சென்னை மாகாணத்திற்குள் கால் வைத்தது முதல் சமயத்திற்குத் தகுந்தபடி பேசி ஜனங்களை ஏமாற்றி வந்ததும் அந்த புரட்டுகளை பார்ப்பனர்களும் பார்ப்பனரல்லாதார்களும் வெளிப்படுத்தியதும் "மித்திரனிலும்" "திராவிடனிலும்" பார்த்திருக்கலாம். அவர் சென்ற இடங்களிலெல்லாம் கோவிலுக்குள் தீண்டத்தகாதவர்என்கிறவர்கள் போவதற்கு இந்து சாஸ்திரங்கள் இடங்கொடுக்கிறதென்று சொல்லிக்கொண்டே வந்து விட்டு தாம் அதிக சாஸ்திரம் பார்த்திருப்பதாயும் சொல்லிவிட்டு கடைசியாக சென்னையில் 22 தேதி கூடிய சாஸ்திரிகள் கூட்டமொன்றில் சிக்கி தீண்டத்தகாதவர்கள் என்பவர்கள் கோவிலுக்குள் பிரவேசிப்பதற்கு சாஸ்திரத்தில் இடமில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொண்டாராம். எனவே திரு மாளவியாவின் பித்தலாட்டம் பார்ப்பனர்களின் அசல் அயோக்கியத்தனத்திற்கு ஒரு உதாரணமாகும்.

## சட்டசபைத் தேர்தல், திரு. A. T. பன்னீர்செல்வத்திற்கு ஆதரவு

தஞ்சை ஜில்லா போர்டின் தலைவரும், சட்ட நிபுணரும், பார்ப்பனரல்லாதார் தலைவர்களில் ஒருவருமாகிய திருவாளர் ராவ் பகதூர் A. T. பன்னீர்செல்வம் அவர்கள் வருகின்ற சென்னைச் சட்டசபைத் தேர்தலில் தஞ்சை, திருச்சிராப்பள்ளி, மதுரை கிறிஸ்தவத் தொகுதியின் பிரதிநிதியாக நிற்கவேண்டுமென்பது எங்களது கோரிக்கையாகும். திருவாளர் A. T. பன்னீர்செல்வம் அவர்கள் நமது கிறிஸ்தவர்களுக்கும் இவர்களைப் போன்றே போதிய அளவு உரிமைகள் இல்லாத பார்ப்பனரல்லாத சமூகத்துக்கும் சென்ற பத்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிறந்த தொண்டுபுரிந்து வந்ததுடன் ஜில்லாபோர்டு நாணயக்கூட்டுறவுச் சங்கம் முதலான சபைகளில் முதன்மையிடம் பெற்று உழைத்துவருதலை நீங்கள் எல்லீரும் பார்த்து அல்லது கேட்டு அறிவீர்கள். இவர்களை நீங்கள் உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பீர்களாயின் இவர்கள் சட்டசபையில் தமது உயர்ந்த குணங்களாலும் நுண்ணறிவாலும், சொல்வன்மையாலும் நமது கிறிஸ்தவத்தொகுதிக்கு வேண்டும் பற்பல நன்மைகளுக்காக மனப்பூர்வமாக இடையறாது உழைத்து வருவாரென்பது எங்களது உறுதியான நம்பிக்கையாகும். கிறிஸ்தவத் தொகுதி வாக்காளர்களாகிய நீங்கள் யாவரும் ஒரே மனதுடன் பெருமுயற்சி செய்து திருவாளர் ராவ்பகதூர் A. T. பன்னீர்செல்வம்பார்-அட்-லா அவர்களை நமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துப் பெரும்பயன் அடையுமாறு உங்களெல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இங்ஙனம்
தஞ்சை ஜில்லா
தென்னிந்திய நலஉரிமைச்சங்கத்தார்
சுயமரியாதைச் சங்கத்தார்

## ஊற்று நீர்வீழ்ச்சி தண்ணீர்தொட்டி திறப்பு விழா

ஈரோடு மண்டி வர்த்தகரும் திரு. ஈ. வெ. ராமசாமி அவர்களின் சிறிய தகப்பனுருமான திரு அ. கோவிந்த நாயக்கர் அவர்கள் ஞாபகார்த்தமாக அவரது குமாரர் திரு அ. கோ. ராமசாமிநாயக்கரால் ஈரோடு கச்சேரி ரோட் பெருந்துறைரோட் ஜங்ஷனில் ஒரு நீர் வீழ்ச்சி தண்ணீர் தொட்டி ஆயிரம்ரூபாய்செலவில் கட்டப்பட்டு 19ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை கோவை உயர் திரு ராவ்பகதூர் சி. எஸ். இரத்னசபாதி முதலியார் அவர்களால் திறப்புவிழா நடத்தப்பட்டது. அன்று மாலையில் ஈரோடு தாலூகா போர்டு ஆபிசில் சுமார் 500 பேருக்குமேலாக ஒரு [டீ பார்ட்டி] சிற்றுண்டி விருந்து நடத்தப்பட்டது. அவ்விழாவுக்கு இவ்வூர் பிரபலஸ்தர்களும், உத்தியோகஸ்தர்களும் மற்றும் அநேக கனவான்களுமாக சுமார் ஆயிரம் பேருக்கு மேலாகவே வந்திருந்தார்கள். திரு முதலியாரை தண்ணீர்த் தொட்டியை திறந்துவைக்கும்படி திரு எஸ். மீனாக்ஷிசுந்திரம் B. A., L. T. அவர்கள் திரு. முதலியார் பொது நல உழைப்பிலும் சட்டசபையிலும் ஜில்லாபோர்டிலும், முனிசிபாலிட்டியிலும் செய்த அரிய வேலைகளைப்புகழ்ந்து சொல்லிக்கேட்டுக்கொண்டார். பிறகு திரு மு. ச. முத்துக்கருப்பஞ்செட்டியார் அவர்கள் திரு அ. கோவிந்த நாயக்கரின் வியாபாரச் சக்தியையும் பரோபகாரத்தன்மையையும் அவர் செய்துள்ள தர்மத்தையும் அவரது பெருமையையும் எடுத்துச்சொன்னவுடன் திரு முதலியார் பட்டுத்துணியால் மூடி இருந்த தண்ணீர் தொட்டியை கயிறுகொண்டு இழுப்பதன் மூலம் திறந்த சாவியால் திருகு குழாயைத்திறந்தார். பிறகு திரு விஸ்வாசம் B. A., L. T. & வக்கீல் அவர்கள் அ. கோ. ராமசாமி நாயக்கரின் அரிய குணத்தைப்பற்றி எடுத்துச் சொல்லி திரு முதலியாருக்கு இன்னமும் உயர் பதவிகளும் பட்டங்களும் கிடைக்க வேண்டுமென்று சொல்லி வந்திருந்தவர்களுக்கு வந்தனம் சொல்லிய பிறகு திரு ஈ. வெ. ராமசாமி அந்த இடம் கொடுத்ததற்கு முனிசிபாலிட்டிக்கு வந்தனம் சொன்னார். பிறகு சந்தனம் பன்னீர் கல்கண்டு பழவகை வெற்றிலை பாக்கு வழங்கப்பட்டன. ஒரு நிருபர்.

## சென்னை சட்டசபை தேர்தல்

நடக்கப்போகும் சென்னை சட்டசபைத் தேர்தலில் இராமநாதபுரம் ஜில்லா பிரதிநிதிஸ்தானங்களில் ஒன்றுக்கு தாம் அபேக்ஷகராக நிற்பதாக மதுரை வக்கீல் திரு. எஸ். ராமசாமி நாயுடு அவர்கள் B A., B.L, அறிவிக்கிறார்.

## சட்டசபைக் காலாவதி

இந்திய சட்டசபையின் காலாவதியை ஒரு வருஷகாலம் நீடித்து வைத்திருப்பதாகத் தெரிவருகின்றது. அநேக மாகாணச்சட்டசபைகளும் இதை அனுசரித்து தம் காலாவதியை ஒரு வருஷகாலம் நீட்டிவைத்தாலும் வைக்கலாம்.

## ஓர் சமாதானம்.

நமது "குடி அரசின்" சந்தாதாரர்கள் பெருக்கத்தால், ஈரோட்டிலிருந்து வெளியிடத்தகுந்த இயந்திர சௌகரியங்கள் போதாமலிருப்பதால் கொஞ்சகாலத்துக்கு நமது பத்திரிகை நிலயம் கூடியசீக்கிரம் சென்னைக்கு மாற்ற உத்தேசித்துள்ளோம். அதுவரை பத்திரிகைவெளியாக இரண்டொரு வாரத்துக்குஒன்றிரண்டு நாள் தாமதப்படலாம். ஆகையால் வாசகர்கள் பொறுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

## குடி அரசு

ஈரோடு சுக்கில-ஞு வைகாசி-மீ 13-உ.

## உத்தியோக ஆசையும் தேசீயப் புரட்டும்.

திரு. வரதராஜுலுக்கு கொஞ்சகாலமாய் உத்தியோகப் பைத்தியம் தலைக்கேறி விட்டது. தேசீயமெல்லாம் இப்போது உத்தியோகத்திற்குள்ளாகவே ஐக்கியமாய் விட்டது. தமிழ்நாட்டில் பார்ப்பனர்கள் கூடச் சேருவதற்கு சுயேச்சையுள்ள பார்ப்பனரல்லாதார் ஒருவருமில்லாமல் போனதையும் தமது கக்ஷிக்கு எந்த விதத்திலும் கூலிகளையும் காலிகளையும் விட வேறு யாருடைய அனுதாபமும் இல்லாமல் போவதையும் பார்த்து நாங்கள் உத்தியோகங்கள் ஏற்றுக் கொள்ள சம்மதித்து உத்தியோகங்கள் சம்பாதிக்கப்போகின்றோம், யாராவது வருகின்றீர்களா என்று கேட்டவுடன் திரு. வரதராஜுலுவைப் போன்ற ஆள்கள் கூட அப்படியானால் தமக்கும் ஏதாவது கிடைக்காதா என்ற எண்ணத்தின் மீது இப்போது ஐயங்காருடன் சேர்ந்துகொண்டு உத்தியோகம் ஒப்புக் கொள்ள வேண்டியது அவசியமென்றும் "நான் வெகு காலமாக இதைச் சொல்லிவந்திருக்கிறேன்" என்றும் சொல்லிக்கொண்டு ஐயங்கார் பின்னால் கடற்கரைக்குச் சென்று கூப்பாடு போட ஆரம்பித்து விட்டார். ஆனால் திரு. வரதராஜுலு உத்தியோகம் சம்பாதிப்பதற்கும் ஒப்புக் கொள்ளுவதற்கும் சொல்லும் காரணம் தான் நம்மை இந்த வியாசம் எழுதச் செய்கின்றது. அதாவது:—

ஜஸ்டிஸ் கட்சியாரை ஒழிப்பதற்குத் தாம் மந்திரி வேலை ஒப்புக் கொண்டாக வேண்டும் என்கின்றார். காங்கிரஸ் காரர்களுக்கோ அல்லது திரு வரதராஜுலுவுக்கோ மந்திரி வேலை ஒப்புக்கொள்ள என்றைக்காவது யோக்கியதை இருந்து இவர்கள் ஒப்புக் கொள்ளாமல் தியாகம் செய்திருந்தால் இவர்கள் பேச்சு யோக்கியமானதாயிருக்கும். ஒத்துழையாமை ஆரம்பத்தில் முதல் சட்டசபையில் திரு. சீனிவாசையங்கார் காங்கிரசுக்கு விரோதமாயிருந்து காங்கிரசையும் வைதுகொண்டு சட்டசபைக்குப் போய் அங்கு தமக்கு எவ்வித யோக்கியதையும் கிடைக்காததால் விட்ட[illegible]து சீ இந்தப் பழம் புளிக்குமென்று கருதி கூப்பாடு போடுகின்றவர். இரண்டாவது சட்டசபைக்கு எல்லோரும் போகவேண்டுமென்று திரு. வரதராஜுலுவும் கூட சத்தம்போட்டு சுயராஜ்யக் கட்சியை ஆதரித்து ஊர்ஊராய்ப் பார்ப்பனர்கள் பின் திரிந்து அவர்களுக்கு ஓட்டு வாங்கிக் கொடுத்தவர். அப்பொழுதும் காங்கிரஸ்காரருக்கு உத்தியோகம் ஒப்புக் கொள்ளக்கூடிய பலமும் யோக்கியதையும் கிடைக்கவில்லை. அதோடு சட்ட சபையில் தங்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை என்றும் சட்டசபைக்கு போனது மானக்கேடு என்றும் சொல்லிக்கொண்டு சட்டசபை கலையுமுன்பே முகத்தில் துணியைப் போட்டு மறைத்துக் கொண்டு அழுது கொண்டே வந்தார்கள். பிறகு மூன்றாவது சட்டசபைக்கும் திருவாளர்கள் சீனிவாசையங்கார் கல்யாணசுந்தர முதலியார் வரதராஜுலு, ஷாபிமுகம்மது சாயபு, ஐயவேலு குப்புசாமி, அண்ணாமலை ஆகிய எல்லோர்களுமே ஊர் ஊராய்த்திரிந்து காங்கிரஸ்காரர்களுக்கு ஓட்டுவாங்கிகொடுத்தார்கள், கடைசியாக "காங்கிரசுக்காரர்களே எல்லாஸ்தானங்களையும் கைப்பற்றி விட்டார்கள், ஜஸ்டிஸ் கட்சியை அழித்தாய் விட்டது" என்று விளம்பரப்படுத்தினார்கள். இதை திரு. வரதராஜுலு திரு.சத்தியமூர்த்தியை முதல் மந்திரிஸ்தானத்தை ஒப்புக் கொள்ளும்படி தந்திமூலம் சொன்னார். திருவாளர்கள். விஜயராகவாச்சாரி, ராஜகோபாலாச்சாரி, சி. பி. ராமசாமி அய்யர், சீனிவாசய்யங்கார் முதலிய எல்லாப்பார்ப்பனர்களும் தங்கள் கையாலானவரைபார்த்தார்கள். கடைசியாகஒன்றுமே முடியாமல் ஒரு புதுக்கட்சியை சிருஷ்டித்து அதன் பெயரால் மந்திரி ஆதிக்கத்தைப் பெற்று 'தேசீயத்தை' நடத்த ஆரம்பித்தார்கள்.

அதுவும் மூன்று நாளைய வாழ்வாய் முடிந்தது. அது முதல் இதுவரை என்ன என்ன தந்திரமோ செய்து பார்த்தாய் விட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் ஒரு ஈள்ளாணியையும் அசைக்க முடியவில்லை. காங்கிரசுக்கு சில படித்த பணக்காரர்களிடமும் பாமர மக்களிடமும் மதிப்பு இருந்த காலத்திலேயே ஒரு காரியமும் செய்யமுடியாமல் போன இவர்கள் காங்கிரஸ் யோக்கியதை சந்தி சந்தியாய்ச் சிரிப்பாய் சிரிக்கும் போதும், காங்கிரசு தேசீயம் என்றால் காலிகளுடையவும், கூலிகளுடையவும், வயிற்றுப் பிழைப்பு தேசியக்காரர்களுடையவும் கூட்டம் என்று வெளிப்படையாய் அகராதியில் அர்த்தம் ஏற்பட்டிருக்கும் இக்காலத்திலும் காங்கிரசென்று சொல்லி ஒரு மூடனையாவது ஏமாற்ற முடியுமா? என்று கேட்கின்றோம். காங்கிரஸ் மந்திரி வேலையையும் உத்தியோகத்தையும் ஏற்றுக் கொள்ளப் போகின்றது, ஜனங்களுக்கெல்லாம் மந்திரி பிச்சையும் உத்தியோகப்பிச்சையும் கொடுக்கப் போகின்றோம் என்று' ஒரு முதலை தெருவில் போவார்களைக் கூப்பிட்டு பொன் காப்பு கொடுப்பதாய்ச் சொன்ன கதைபோல் கூப்பிடுவதனாலும், திருவாளர்கள். வரதராஜுலுவையும் கல்யாணசுந்தரத்தையும் ஆமாசாமி போட்டு பின் பாட்டு பாடச் சொல்லுவதினாலும் யார் மயங்கி விட முடியும்? எனவே, இனி, கல்யாண சுந்தரமும் வரதராஜுலுவும் ஜஸ்டிஸ் கட்சியைப் பற்றி சென்ற வருஷத்தில் பேசியிருக்கும் பேச்சும் இப்போது பேசும் பேச்சும் என்ன என்பதை சற்று கவனித்துப் பார்ப்போம்.

சென்ற வருஷ கோயமுத்தூர் மகாநாட்டில் பேசும் போது திரு. கல்யாண சுந்தரம் பார்ப்பனர்களின் அயோக்கியத்தனத்தையும் காங்கிரசின் அக்கிரமத்தையும் குறிப்பாய் திரு. சீனிவாசய்யங்கார் அயோக்கியத்தனங்களையும் எடுத்துச் சொல்லி காங்கிரஸ் தலைவரான சீனிவாசையங்காரைத் தலைவர் என்று சொன்ன நாக்கை அறுத்து சாணியில் போட்டு பிராயச்சித்தம் செய்து கொள்ளுவதாகவும், இனிமேல் ஜஸ்டிஸ் கட்சித்தலைவரையே தாம் தலைவர் என்று மதித்துக்கூப்பிடப் போவதாகவும் சுமார் 5000 பேர்கள் முன்னிலையில் சொல்லி ஜனங்களுடைய கைதட்டலைப்பெற்றவர். தீண்டாமையும் வகுப்புப்பிணக்கும் உள்ள நாட்டில் அரசியல் இயக்கம் (காங்கிரஸ்) கூடாது அதை ஒழிக்க வேண்டும் என்றும் சொன்னவர். அதுமாத்திரமல்ல "காங்கிரஸ் உத்தியோகமேற்றதால் நான் காங்கிரசிலிருந்து விலகிக்கொள்ளுகிறேன்" என்று ராஜீநாமா செய்தவர். இன்னமும் அவர் காங்கிரசையும் திரு. சீனிவாச ஐயங்காரையும் உத்தியோகம் ஒப்புக் கொள்ளுவதையும் பற்றி கண்டித்தும் வைதும் எழுதின எழுத்துக்கள் நமது குப்பையில் வண்டிவண்டியாய்க்கிடக்கின்றன. இப்படிப்பட்டவருக்கு இப்போது காங்கிரசும், உத்தியோகமேற்பும், சீனிவாசய்யங்கார் தலைமையும், ஜஸ்டிஸ் கட்சியை வைவதும், அவர்களுக்கு ஓட்டுகொடுக்காதீர்கள் என்பதும் என்ன அவசியத்திற்காக அதுவும்தேர்தல் பிரசாரம்வரும்போதுமாத்திரம் ஏன் வந்தது? என்பது விளங்கவில்லை. அதுபோலவே திரு. வரதராஜுலுவின் யோக்கியதையையும் சற்று கவனிப்போம். திரு. வரதராஜுலுவும் பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆரம்பித்தவுடன் திரு. கல்யாண சுந்தரத்தைப்போலவே பார்ப்பனர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்கள் பின் ஊர் ஊராய்த் திரிந்துகொண்டு டாக்டர். நாயரையும், சர். தியாகராயரையும் பார்ப்பனரல்லாதார இயக்கத்தையும் மிக்க கேவலமாய் வைவதின் மூலம் பார்ப்பனர்களாலும் அவர்களது பத்திரிகைகளினாலும் விளம்பரம் செய்யப்

பட்டு மனிதரானவர். அதுமுதல் இதுவரை பார்ப்பனர்களுக்கே நல்ல பிள்ளையாய் இருப்பதுடன் பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்கும் அவர்களது நலத்திற்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இடையூறும் துரோகமும் செய்து கொண்டும் ஏதாவது ஒரு சமயத்தில் பார்ப்பனர்கள் இவரை லட்சியம் செய்யாவிட்டால் மாத்திரம் மறுபடியும்பார்ப்பனர்களைப் பயப்படுத்துவதற்காகப் பார்ப்பனரை வைதுகொண்டு பார்ப்பனரல்லாதாரைப் பற்றியும் அவர்களது இயக்கத்தைப் பற்றியும் புகழ்ந்து பேசி அதில் சேருவதாய் வேஷம் போடுவதும், பிறகு அவர்கள் சரிப்பட்டுவிட்டால் மறுபடியும் பார்ப்பனர்களுடன் சேர்ந்து கொள்வதும், அவர்கள் இவரை லக்ஷியம் செய்யாவிட்டால் ஏதாவது ஒரு சாக்கை வைத்துக்கொண்டு தாமாகவே அவர்களுள்போய் நுழைந்து கொள்வதும் வழக்கமாயிருந்து வருவதை அநேக உதாரணங்களால் அறிந்திருக்கலாம்.

கொஞ்சகாலத்திற்குமுன் சில ஸ்தல ஸ்தாபனதேர்தல்களின்போது திரு. வரதராஜுலுபார்ப்பனர்களுக்காக எவ்வளவோ பாடுபட்டும், அவர்கள் பல இடங்களில் தோல்வி அடைய நேரிட்டவுடன் தாம் ஜஸ்டிஸ் கக்ஷியில்சேர ஆசைப்பட்டு, "தமிழ் நாடு" பத்திரிகையில் பார்ப்பனர்களை வைதும், ஜஸ்டிஸ் கக்ஷியைப் புகழ்ந்தும், ஷை பத்திரிகையில் எழுதிய ஒரு தலையங்கத்தின் குறிப்புகளாவன:—

“சமீப தேர்தல்களில் சுயராஜ்ஜியக் கக்ஷியாருக்கு ஒரு ஸ்தானம்கூட கிடைக்காமல் போனதற்குக் காரணம் சென்ற ஒரு வருஷகாலமாக பிராமணர்கள் செய்துவரும் சூழ்ச்சிகளை ஜனங்கள் அறியத்தொடங்கினமைதான் அதனாலேயே பிராமணர்களுக்குத் தோல்விகிடைத்து வருகின்றது. பிராமணரல்லாதாரை நசுக்கிவிட பிராமணர்கள் கட்டுப்பாடாக செய்துவந்த சூழ்ச்சிதான் தேசீய பிராமணரல்லாதார்கள்கூட ஜஸ்டிஸ் கக்ஷியிடம் அநுதாபம் காட்டும்படி செய்துவிட்டது. எத்தனையோ பிராமணர்கள் உத்தியோகத்திற்காக காங்கிரசை எதிர்த்துக் கொண்டிருக்கிறார்கள். பிரிட்டிஷார் இந்நாட்டில் நிலைபெற்றதுமுதல் பிராமணர்கள் உத்தியோக வேட்டை ஆடிவருகிறார்கள். ஆனால் ஜஸ்டிஸ் கட்சியார் இந்த ஆறு வருஷமாகத்தான் உத்தியோகம் வேண்டும் என்று கேட்கின்றார்கள். இதில் என்ன தவறு இருக்கின்றது? இது இயற்கைதானே. உத்தியோகம் கூடாது என்றால், எல்லா வகுப்பாருக்கும் கூடாதுதானே. ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கு மாத்திரம் உத்தியோகம் கூடாது என்று சொல்ல யாருக்கு அதிகாரமிருக்கிறது? யார் உத்தியோகத்திற்குப் போனாலும், காங்கிரஸ் பிராமணருக்கு ஏன் இவ்வளவு கவலை? சுயராஜ்ஜியம் வேண்டுமென்று போராடும் கூட்டத்தாருக்கு அவர் உத்தியோகத்திற்குப் போகிறார், இவர் உத்தியோகத்திற்குப் போகிறார் என்கிற சூத்திரம் ஏன்?

ஆறுவயதாகிய ஜஸ்டிஸ் கக்ஷிக்காரரை உத்தியோகவேட்டைக்காரரென்றால் 150 வருடங்களாக உத்தியோக வேட்டை ஆடிவரும் இந்த பிராமணர்களை என்னவென்று அழைப்பது? உத்தியோகங்களிலிருக்கிற பிராமணர்கள் தங்கள் பதவிகளிலிருந்து வெளியில் வந்து பிறகு ஜஸ்டிஸ் கக்ஷியாரை நீங்களும் உத்தியோகங்களை விட்டு வெளியில் வந்துவிடுங்கள் என்று சொன்னால் மாத்திரம் அதை நியாயம் என்று நாம் ஒப்புக் கொள்ளுவோம். இப்போது ஜஸ்டிஸ் கக்ஷிக்காரரை உத்தியோக வேட்டைக்காரர்கள் என்று அழைக்கும் பிராமணர்கள் உத்தியோகங்களை துறந்த முனிவர்கள் அல்ல. தங்கள் ஜாதியார் விடாப்பிடியாய் பிடித்துக்கொண்டிருக்கும் உத்தியோகங்களைப் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசாமல் ஜஸ்டிஸ் கக்ஷியாரைப் பற்றி மாத்திரம் தூற்றிப்பேச இந்த அன்னக்காவடிகளுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

ஜஸ்டிஸ் கக்ஷியார் பிராமணரல்லாதார் என்கிற பாவத்திற்காக காங்கிரஸ் பிராமணர், மிதவாதப் பிராமணர், ஒத்துழையாப்பிராமணர், குமாஸ்தா பிராமணர் முதலிய சகல பிராமணர்களும் அபிப்பிராயபேதமின்றி ஒன்று சேர்ந்து ஜஸ்டிஸ் கக்ஷியை எதிர்த்து வருகின்றனர். குருகுலப் போராட்டத்திலும், இந்துமத பரிபாலன சட்ட விஷயத்திலும், தேசீயபிராமணரும் வைதீகப் பிராமணர்களும் நடந்துகொண்டதே பார்ப்பனர்களின் யோக்கியதையை அறியப்போதுமானது. சின்னக் காந்தி என்று ஏமாற்றிவந்த ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி முதல் ஆசாரந்திருத்தம் பேசிவந்த ஸ்ரீ சீனிவாசய்யங்கார் வரை ஒன்று சேர்ந்து கொண்டு தங்கள் ஜாதி மேல் ஜாதி என்று பேச ஆரம்பித்து விட்டார்கள். அன்று முதல் பிராமணர்கள் மீதிருந்த நம்பிக்கை தொலைந்து விட்டது. தேசீய கிளர்ச்சியில் உள்ள பிராமணர்கள் நியாய புத்தி உள்ளவர்களாயிருந்திருக்தால் இன்றுள்ள பிராமணர்-பிராமணரல்லாதார் என்கிற சண்டை ஏற்பட்டிருக்காது. பிராமணர்கள் சில அயோக்கியர்களை ஏவி விட்டு பிராமணரல்லாதாரை திட்டச்சொன்னதாலும், தேர்தல்களில் கையாளப்படும் சூழ்ச்சிகளைக் கண்டதாலும், ஸ்ரீமான்கள் நாயுடுவும் முதலியாரும் காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டார்கள். சில பிராமணரல்லாத அன்னக் காவடிகளை ஏவி விட்டு பிராமணரல்லாத தலைவர்களைத் திட்டும்படியும், பத்திரிகைகளில் தாக்கி எழுதும்படியும் செய்தார்கள். பணத்தைக்கொண்டு எல்லாம் செய்து விடலாம் என்று நினைத்து ஸ்ரீ சீனிவாசய்யங்கார் பிராமணரல்லாத அன்னக் காவடிகளை திட்டும்படி செய்தால் பிராமணரல்லாதார் எப்படி பொறுத்துக் கொண்டிருப்பார்கள்? இதன் பலனாக எல்லோர் மனமும் மாறிவிட்டது. ஒரு தேசீயப் பிராமணனைவிட ஒரு ஜஸ்டிஸ் கட்சி பிராமணரல்லாதார் எவ்வளவோ சிலாக்கியம்.

ஸ்ரீ சீனிவாசய்யங்கார் மந்திரி பதவிகளை ஒப்புக்கொள்வதாய் பேசிய பேச்சுகள் வெளியாய் விட்டன. ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் போன்றவர்களின் மனத்துயரத்தை யாரும் அலக்ஷியம் செய்துவிட முடியாது பிராமணரல்லாதாரை நசுக்கி விடலாம் என்ற எண்ணமும், பணத்தால் எதுவும் செய்து விடலாம் என்கிற எண்ணமும் அன்னக்காவடிகளுக்குக் கூலிகொடுத்து ஏவி விட்டு தங்களைக் காப்பாற்றிக்கொள்ளலாம் என்கிற எண்ணமும் இனி பலிக்காது.

பிராமணர்கள் சுயராஜ்ஜியம் கேட்பது உண்மையானால் அரசியல் விஷயத்தில் இன்னவர்களுக்கு இத்தனை ஸ்தானங்கள் என்பதை நிர்ணயித்து எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்ற கொள்கையை ஒப்புக்கொண்டு பிராமணர்கள் அல்லாதார் முன்னேற்றத்திற்கு பிராமணர்கள் இடையூறு செய்யாமல் இருக்கும்படி தங்கள் ஜாதியாரைக் கேட்டுக்கொண்டு பிரபல பிராமணர்கள் கையெழுத்திட்டு உடனே ஒரு அறிக்கை வெளியிட்டால்தான் இப்பொழுது பரவிவரும் ஜாதித் துவேஷத்தை அடக்கமுடியும். இல்லாதவரை கர்மத்திற்குத் தக்க பலன் கிடைக்கும்.” என்று எழுதியிருக்கிறார்.

தவிர கோயமுத்தூர் பார்ப்பனரல்லாதார் மகாநாட்டில் வந்து காங்கிரசின்பேரால் பார்ப்பனர்கள் செய்யும் அக்கிரமங்களை அடக்கவும் பார்ப்பனர்களை காங்கிரசை விட்டு விரட்டவும் பார்ப்பனரல்லாதார் காங்கிரசுக்கு வரவேண்டுமென்று சொல்லி தாமும் ஜஸ்டிஸ் கக்ஷியில் சேர்ந்துகொண்டதாக பெரிய கூட்டத்தில் விளம்பரப்படுத்தினர்.

சமீபத்தில்சைமன் மதராசுக்குவந்தபோதும் காங்கிரஸ் நடவடிக்கை பிடிக்காமல் காங்கிரசில்ராஜீனாமா செய்தார். இன்னும்இதுபோல் இரண்டு மூன்று வண்டி எழுதலாம். இப்படியெல்லாம் உண்மை இருக்க இப்போது மறுபடியும் ஜஸ்டிஸ்கக்ஷி உத்தியோக வேட்டைக் கக்ஷி அதையும் மந்திரிகள் கனம் சுப்பராயனையும்கனம் முத்தையாமுதலியாரையும் ஒழிக்கவேண்டும் ஆதலால் உத்தியோக மேற்கவேண்டும் என்று திரு வரதராஜுலு கடற்கரையில் கூப்பாடு போடுவதின் இரகசியம் என்ன? என்பதை வாசகர்களே யோசித்து தெரிந்துகொள்ள விட்டுவிடுகின்றோம்,

தவிர அன்றையதினம் பார்ப்பனர்களை அவ்வளவு திட்டிய திரு. வரதராஜுலுக்கு இன்றையதினம் கனம் சேதுரத்தினமய்யர் மந்திரி வேலை பார்ப்பதைப்பற்றி ஒரு வார்த்தைகூட சொல்லாமல் மற்ற மந்திரிகளை மாத்திரம் திட்டுவானேன்? இவையெல்லாம் பார்ப்பன தயவுக்கும் உத்தியோகங்கள் கிடைப்பதானால் தமக்கும் ஒரு எலும்பு கிடைக்கட்டும் என்கின்ற சுயநலமும் பேராசையும் அல்லவா? என்று கேட்கின்றோம்.

வெளியே வரயோக்கியதை இல்லாதபோதும், பதில் சொல்ல யோக்கியதை இல்லாதபோதும், தம் பெயரை வெளிப்படுத்த வேறு சந்தர்ப்பமில்லாதபோதும் உடம்பு காயலா என்று சொல்லிக்கொண்டு காயலாவின்பேரால் பலனடைவதும், கொஞ்சம் சந்தர்ப்பம் கிடைத்தாலும் பார்ப்பனரல்லாதாரை வைது பலன் பெறுவதுமாயிருந்துவிட்டு இப்போது சட்டசபைப்பைத்தியமும் உத்தியோகப் பேராசையும் கொண்டு பழயபடி பார்ப்பனத் தாசனாய் வெளிவந்தால் யார் இவரை நம்பமுடியும்? பார்ப்பனரல்லாதார் கக்ஷியை அழிக்கவும். பார்ப்பனரல்லாதார் மந்திரிகளை ஒழிக்கவும் ஒருவர் சட்டசபைக்கு போவதாயிருந்தால் அது திரு காந்தி நிற்பதானாலும்கூட கடுகளவு பார்ப்பனரல்லாதார் இரத்தம் சரீரத்தில் ஓடுபவன்கூட ஓட்டுச் செய்யமாட்டான் என்பது உறுதி.

பார்ப்பனரல்லாதார் மந்திரிகள் இதுவரை இந்த மாகாணத்தில் மந்திரி தோரணையில் செய்த காரியங்களில் இன்ன காரியம் தப்பு என்று குற்றம் சொல்லி அவர்களை ஒழிக்க வேண்டுமென்று ஒருவன் சொல்வானானால் அவன் மனிதத்தன்மையுடையவன் என்று சொல்லலாம். சைமன் கமிஷனை வரவேற்றது ஒரு தப்பு என்று சொல்வதானால் சைமன் கமிஷனை இந்தியாவில் எந்த மந்திரி வரவேற்கவில்லை? வரவேற்று அவர்களிடம் இந்தியாவின் நன்மைக்கு விரோதமான எந்தகாரியத்தைச் சொல்லிவிட்டார்கள்? அதனால் என்ன தீமை விளைந்தது? என்று சொல்லி ஆட்சேபிப்பது யோக்கியமானதாகும். அப்படிக்கில்லாமல் அய்யங்கார் சொ

## கம்மகுல இளைஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்.

தமிழ் நாட்டில் பெரும் ஜனத்தொகை கொண்ட சமூகங்களுள் கம்ம சமூகமும் ஒன்றாகும். இவர்கள் இல்லாத தமிழ் ஜில்லாவே கிடையாது. இச் சமூகத்தில் நிலச்சுவான்தார்களும் ஜமீன்தார்களும் பணக்காரர்களும் இருக்கின்றனர். எல்லா வகுப்பினரும் சங்கங்கள் ஸ்தாபித்து மகாநாடுகள் கூட்டி தங்கள் தங்கள் முன்னேற்றத்துக்காகத் தீவிரமாகப் பாடு பட்டுக் கொண்டு வரும் இக்காலத்தில் இவர்கள் வீண் கட்சிப் பிணக்குகளிலும் அர்த்தமற்ற குருட்டு நம்பிக்கைகளிலும் மூழ்கி உறங்கிக் கிடக்கின்றனர். இவர்கட்கு கல்வியைப்பற்றி ஒரு சிறிதும் கவலை இல்லை. தற்காலத்தில் உலகமெங்கணும் நற்பயன் தந்துவரும் சாஸ்திரீயமான விவசாய முறையும் இவர்கள் அறியார். வீண் சடங்குகளிலும் ஆடம்பரங்களிலும் கோர்ட்டுகளிலும் ஏராளமாகச் செலவு செய்து பெரும்பாலோர் கடன் வேதனையால் துன்புறுகின்றனர். இச்சமூகத்தில் படிப்புள்ள ஒரு சில இளைஞர்கட்கும் தங்கள் சமூக முன்னேற்றத்தில் கவலையும் உணர்ச்சியும் இருப்பதாகத் தெரியவில்லை. திருநெல்வேலி ஜில்லாவிலும் கோயமுத்தூர் ஜில்லாவிலும் இரண்டொரு கூட்டங்கூடி கலைந்ததைத் தவிர வேறு பலன் ஒன்றையும் காணோம். அன்பார்ந்த சகோதரர்களே! இப்படியே வாளா உறங்கிக் கிடப்பின் நமது கதி என்னாவது? இனிமேல் பெரியவர்கள் என்போரை நம்பிப்பயனில்லை. அவர்கட்கு வரட்டு நியாயம் பேசவதும் ஐயங்கார் பார்ப்பனர் (குருவுலார்) காலில் விழுவதும் தவிர வேறொன்றும் தெரியாது. எவ்வளவு எடுத்துக் காட்டினாலும் இவர்கள் தங்கள் குருட்டுப் பழமைப்பித்தை ஒரு நாளும் விடப் போவதில்லை. ஆதலால் முற்போக்குணர்ச்சியும் ஊக்கமும் உள்ள இளைஞர்கள் தான் நமது குல முன்னேற்றத்தில் தீவிர சிரத்தை செலுத்த வேண்டும். எனவே விரைவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கம்மகுல இளைஞர் மகாநாடு என்பதாக ஒன்று கூட்டி நமது குல முன்னேற்றத்திற்கான விஷயங்களை ஆலோசனை செய்து தீர்மானித்துப் பிரசாரம் செய்யவேண்டியது மிகவும் அவசியமாக இருக்கிறது. இதற்கான ஏற்பாடுகளை விரைந்து செய்வார்களாக என்று திரு. ஆர். ராமசாமி அறிவிக்கிறார்.

---

ல்வதற்கெல்லாம் ஆமா சாமி போட்டுக்கொண்டு பார்ப்பனரல்லாதார்களை வைவதின் மூலமே தேசிய வாதியாகவும் சட்டசபை மெம்பராகவும் அதன் மூலம் ஏதாவது பலனடையலாமென்றும் நினைத்தால் அது இனி ஒருகாலமும் கைகூடாது என்று தைரியமாய்ச் சொல்லுவோம். மற்றபடி திரு அய்யங்கார் போககியதைய மற்றொருசமயம் வெளிப்படுத்துவோம்.

## ஆதனூர் ஆதிதிராவிடர் ஐக்கிய சங்கம்.

16—5—29 ௳யில் திரு. எம். ஐயாக்கண்ணு அவர்கள் தலைமையின்கீழ் ஷடி சங்கக் கூட்டமொன்று நடைபெற்றது. திருவாளர்கள் எம். செங்கமலை, எம். திவ்வியநாதன், முதலியவர்கள் சமூகமுன்னேற்றத்தைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தாருக்காக உழைத்துவரும் திரு. ஈ. வெ. ராமசாமியார், ஜே. எஸ். கண்ணப்பர் முதலியவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும், இவ்வூர்ச் சேரியிலிருந்து குடி ஜலக்குளத்திற்குப் போகும் பாதையை ஒழுங்குபடுத்திக் கொடுக்குமாறு திருச்சி லேபர் ஆபீசரைக் கேட்டுக் கொள்ளுவதாகவும், இரவுப்பாடசாலை ஏற்படுத்தவேண்டுமாயும், மதுபானம் செய்யக்கூடாதென்றும், சிறுவர்களைக் கட்டாயம் படிக்க வைக்கவேண்டுமென்றும், குருப்பலூர் மகாநாட்டுத்தீர்மானப்படி சாத்தனூர் ஆதிதிராவிடர்கள் செத்தமாட்டைத் தின்னுமலிருப்பத்தைப் பாராட்டுவதாகவும் கூட்டுறவு சங்கம் ஏற்படுத்தவேண்டுமாயும் தீர்மானங்கள் நிறைவேற்றியதாக திரு. எம். திவ்வியநாதன் அறிவிக்கிறார்.

## செங்குந்தர் பாங்கு திறப்புவிழா

மே 19 ௳ ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணிக்கு ஈரோடு வா. செ. அருணாசல முதலியார் அண்டு பிரதர்ஸ் கட்டிட மேல்மாடியில் திரு வி. எஸ். செங்கோட்டையா அவர்கள் முயற்சியால் "ஈரோடு செங்குந்தர் பாங்கி" ஒன்று திறக்கப்பட்டது. அநேக வியாபாரிகள் விஜயம் செய்திருந்தார்கள். மேல்கண்ட பாங்கியை திறந்துவைக்கும்படி திரு. ஈ. வெ. ராமசாமி கோவை திரு சி. எஸ். இரத்தினசபாபதி முதலியார் அவர்களை கேட்டுக்கொண்டவுடன் திரு முதலியார் பாங்கியின் நன்மையைப்பற்றியும் அவசியத்தைப் பற்றியும் சிலவார்த்தைகள் சொல்லி பாங்கியின் பெயர் எழுதப்பட்ட (போர்ட்) பலகையை திறந்துவைத்தார்.

உடனே சுமார் 30 ஆயிரம் ரூபாய்க்கு அங்கேயே பங்குகள் சேர்ந்தன. இன்னும் அநேகர் சுமார் 50 ஆயிரம் வரை ஏற்கனவே வாக்களித்திருப்பதாய்த் தெரிய வருகின்றது. கடைசியாக திரு. வி. எஸ். செங்கோட்டய்யா அவர்கள் செங்குந்த மகாநாட்டுத் தீர்மானப்படி இந்த பாங்கி திறக்கப் பட்டதாகச் சொல்லி வந்தனம் கூறி முடித்தார்.

## நமது அநுதாபம்.

ஈங்கூர் திருவாளர் கந்தசாமிக் கவுண்டருடைய தமையனார் திருவாளர். முத்துசாமிக் கவுண்டர் அவர்கள் 22—5—29-ல் காலஞ்சென்றமை கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம். பிரிவாற்றாமைக்கு வருந்தும் அவர்களுடைய குடும்பத்தாருக்கு எமது அநுதாபத்தைத் தெரிவித்து கொள்ளுகிறோம்.

## பம்பாய் மாகாணத்திலும் சுயமரியாதை மகாநாடு.

பம்பாய் மாகாணத்தில் கோர்வதிக்குச் சமீபத்தில் உள்ள சிட்டிக்கோன் என்ற ஊரில் டாக்டர் அம்பதகார் எம். ஏ. பார்-அட்-லா அவர்கள் தலைமையின் கீழ் 26—5—29ல் சுவாபிமான் (சுயமரியாதை) சன்மாக்ஷக் பரிஷத் நடைபெறும்.

## மதுரை மருத்துவர் சங்கம்

17—5—29 தேதியில் கூடிய கூட்டத்தில் பண்டித எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைச் சென்னை கார்ப்பரேஷன் அங்கத்தினராக நியமனம் செய்தமைக்காக கனம் டாக்டர் சுப்பராயன் அவர்களை பாராட்டுவதாகத் தீர்மானிக்கப் பெற்றது என்று திரு. வி. எஸ். சண்முகாநந்தம் அறிவிக்கிறார்.

## சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானம்.

### ஸ்திரீகளுக்கு உத்தியோகம்.

கோளத்தில் சமீபத்தில் கூடிய சுயமரியாதை மகாநாட்டுத் தீர்மானப்படி திருவாங்கூர் அரசாங்கத்தார் தங்கள் செக்ரட்டரியேட் ஆபிசில் ஸ்ரீமதி டி. வி. மாதவி அம்மாளுக்கு ஒரு குமாஸ்தா உத்தியோகம் கொடுத்திருக்கிறார்கள். இனி ஆபீஸ் குமாஸ்தா வேலைகள் ஸ்திரீகளுக்கு தாராளமாய் வழங்கப்படுமாம்.

## அகில இந்திய இரண்டாவது தேவாங்க மகாநாடு


ஜுன் 1, 2, 3 தேதிகளில் கோயமுத்தூரில் புதிதாக அமைக்கப் பெற்றிருக்கும் ஸாமி எலக்டிரிக் தியேட்டரில் அகில இந்திய 2வது தேவாங்க மகாநாடு நடைபெறும்.

---


எங்கள் விசேஷ குறைந்த விலை விற்பனை,

ரோல்டு கோல்டு "கோல்டன்" புதுமாடல் கைக்கெடியாரங்கள்.

(4-h)



இதிற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம்போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். உத்ரவாதமானது. ரூ. 4-15-0 வி. பி. வேறு.

ஜீனன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.

(6ம் பக்கத் தொடர்ச்சி.)

டத்தையுடைய சங்கமொன்று ருஷியாவில் இருப்பதாக வாசித்தேன். இம்மாதிரி உணர்ச்சி நம்மக்களுக்குத் தோன்றும் காலம் எவ்வளவு சீக்கிரம் வருகிறதோ அப்போது தான் நம் நாட்டு வாலிபர்கள் முன்னேற மார்க்கமுண்டு. கடவுள் ஒருவர் இருப்பரேயானால் அவரைத் தோத்திரம் பண்ணுமலும், 'அதைக்கொடு' 'இதைக்கொடு' 'உன் பெருமை அப்படி' 'உன் கீர்த்தி இப்படி' என்று இம்சைப் படுத்தாமலும் இருக்கக்கூடிய வாலிபர்களிடம் தான் அவருக்கு அதிக விருப்பமிருக்கவேண்டும். ருஷியா, பிரான்சு முதலிய மேனாடுகளில் இறந்தவர்களைப் பிழைப்பிக்கவைப்பதில் தீவிர முயற்சி நடந்து வருகையில், நமது நாட்டு இளைஞர்கள், "எலும்பைப் பெண்ணுருவாக்கிய பெருமை தமிழுக்கே உரியது" என்று பாட்டுப் பாடிக்கொண்டுமாத்திரமிருந்தால் அதனால் ஒரு பயனும் ஏற்பட்டுவிடாது. அப்பாட்டுகளை பாடுவதினாலும், அழுவதினாலும் மோட்சம் சித்திக்கும், கடவுள் காப்பாற்றுவார் என்றிருந்தால் கிராமபோன் (Gramaphone) பெட்டிகளுக்கல்லவா சீக்கிரம் மோட்சமும், கடவுள் அருளும் கிடைக்கும்!

இந்த சந்தர்ப்பத்தில் சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் ஒன்று ஞாபகமூட்ட விரும்புகிறேன். அதாவது நமது சிறுவர்களைத் தேவாரப் பாடசாலை முதலியவைகளுக்கு அனுப்புவது, பார்ப்பனர்கள் மதம் போச்சு என்று நம்மக்களோடு கூடவே கூக்குரலிட்டாலும், அவர்களுடைய சிறுவர்களையும், சிறுமிகளையும் உத்தியோகத்திற்கும், சம்பாதனைக்கும் தயார் செய்து ஆங்கிலக்கல்வியில் பயில்வித்துவிடுகிறார்கள். அந்தப்படி யோக்கியதை இல்லாத அனாதைக் குழந்தைகளைத்தான் வைதீக ஜீவனத்தை உத்தேசித்து வேதசாஸ்திரப் படிப்பை கற்பிக்கிறார்கள். அதுவும், சாப்பாடும், படிப்பும் இனமாய் கிடைத்தால் தான் படிப்பிக்கிறார்கள். ஆனால் நமது பெரியோர்களோ இந்த சூழ்ச்சியைக் கவனிப்பதில்லை. இன்னும் 20 ஆண்டுகளில் உலக வாலிபர்கள் ஆகாய விமானங்களை ஆயிரக்கணக்காய் ஓட்டிக்கொண்டிருக்கும் போது, நமது சிறுவர்கள் 'தொண்டர் நாதனைத் தூதிடை......................' என்ற பாட்டை தாளம் விடாமல் பாடிக்கொண்டும், 10 முகமுள்ள ருத்திராக்ஷம் விசேஷமா 12 முகமுள்ளது விசேஷமா என்றும், ஆராய்ச்சி செய்துகொண்டிருந்தால் அவர்கள் கதி என்ன ஆகும் என்பதைச் சற்று முன்யோசனையுடனும், இரக்கமான மனதுடனும் யோசித்துப் பாருங்கள். தென் துருவத்திலுள்ள ஆயிரக்கணக்கான விஸ்தீரணமுள்ள புதிய நிலப்பரப்புகளை உலகத்தார் கண்டு பிடித்துக்கொண்டிருக்கும் இந்தக் காலத்தில் தமிழ் நாட்டு எல்லை எது வரையில் என்ற சண்டை இன்னும் தீரவில்லை. கடல் கொண்ட 'லெமூரியா'வைப் பற்றிய விவாதம் இன்னும் ஒழிந்தபாடில்லை. ஆகவே, நமது இளைஞர்கள் உலகில் பிச்சைக்காரர்களாகத் தங்கிவிடவேண்டுமென்ற எண்ணமில்லாவிட்டால் அவர்கள் மேல் கொஞ்சமாவது உங்களுக்கு காருண்யமிருக்குமானால், இந்தியாவுக்கு அப்புறமுள்ள தேசத்தைப் பற்றியே தெரியாத நமது தேவார திருவாசகம் முதலிய நம் புராண நூல்களையுடைய கல்வியைக் கற்றுக்கொடுக்காதீர்களென்று மிகவும் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன். கடவுளையும், பல்லாயிரக்கணக்கான வருஷங்களாய இம்சைப் படுத்தினதுபோதும். இனியாவது அதைக் கொஞ்சம் நிறுத்தி, அவருக்கும் சற்று ஓய்வு கொடுக்குமாறு "அவர்" சார்பாக நான் உங்களை மிகவும் வணக்கமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

### குருட்டு நம்பிக்கையும், மூடப்பழக்கங்களும்.

இனி நமது சமூகத்திலிருக்கும் கண்மூடித்தனமான வழக்கங்களையும், அர்த்தமற்ற சடங்குகளையும், பகுத்தறிவுக்குப் பொருந்தாத நம்பிக்கைகளையும் உடைத்தெறியவேண்டியதும் வாலிபர்களாகிய நம்முடைய பொறுப்பேயாகும். இதில் நமது பெரியோர்களுக்கேகாலதேச வர்த்தமானத்துக்குத் தக்கவாறு வர வர நம்பிக்கை குறைந்து கொண்டே வருகிறது. என்றாலும், மீதியிருப்பதையும் சீக்கிரம் ஒழித்தால்தான் நமது சமூகம் சௌக்கியமாக வாழ முடியும். வெள்ளைப்பூ, செகப்புபூ வைத்துப் பார்த்தும், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலியவைகளில் கயிறு சாத்திப் பார்த்தும், கல்யாணமும் வாழ்க்கையும் செய்துபாழாக்கப்பட்ட சிறுவர்களும்சிறுமிகளும் இந்த நாட்டில் 100க்கு 90க்கு மேல் உண்டு என்பதை எனது சிறிய அநுபவத்திலிருந்து சொல்லுகிறேன். இரண்டு ஆண்களுக்கோ, அல்லது இரண்டு பெண்களுக்கோ, அல்லது ஒரு மனிதனுக்கும் ஒரு கழுதைக்குமோ, அல்லது 5 வயது பையனுக்கும் 70 வயதுக் கிழவிக்குமோ, அல்லது ஒரு குட்டிச் சுவற்றுக்கும், ஒரு ரயில் வண்டிக்குமோ பொருத்தம் பார்த்தாலுங்கூட நல்ல பாட்டும், நல்ல பூவும் உதவுமாகுமென்பதை அறியக்கூடாதவர்கள் இன்னும் இந்நாட்டில், முக்கியமாக என் பிறப்பிடமாகிய இந்த ஜில்லாவில் இருக்கிறார்களே என்னும்போதுதான் மனது மிகவும் துன்பப்படுகிறது. பட்டப்பகல் 12 மணியாயிருந்தாலும் ஒரு குத்து விளக்கு வைத்துதான் சுபகாரியங்கள் நடத்தவேண்டுமென்ற மூட எண்ணம் நமது தேசத்தைவிட்டு அடியோடு தொலையவேண்டுமானால், இளைஞர்களாகிய நாம் தைரியமாக முன் வந்து கொடுமையான இத்தகைய கட்டுப்பாடுகளை உடைத்தெறியவேண்டும். இதில் அதிக சிரமமே இல்லை. ஏனெனில், காலத்திற்கேற்றவாறு நமது முதியோர்கள் பல குருட்டு நம்பிக்கைகளை நாளடைவில் ஒழித்து விட்டார்கள். உதாரணமாக நல்ல வேளையில் நல்ல சகுனம் பார்த்துத்தான் வழிப்பிரயாணம் போகவேண்டுமென்று பிடிவாதமாக இருந்தவர்களையெல்லாம் ரயில் வண்டி ஏற்பட்டு அதை விட்டுவிடும்படி செய்துவிட்டது. ஏனென்றால்சகுனத்திற்கும் வண்டி புறப்படுவதற்கும் சிறிதும் சம்பந்தமில்லை. "சகுனம் நல்லதாயிருக்கும்போது ராகு காலம்" வந்துவிடும். "ராகு காலம்" போனவுடன் கெட்ட சகுனமாகிவிடும். ஆகவே இன்னோரன்ன மூட நம்பிக்கைகளை ஒழிக்க வேண்டியது நமது பொறுப்பேயாகும்.

### ஜாதி வித்தியாசம்.

சாதி வித்தியாசமென்னும் கொடுமை இளைஞர்களாகிய நம்மிடத்தில் அவ்வளவாக இல்லை. ஆனாலும், மனித சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாததான கலப்புமணம் போன்ற விஷயங்களில் தொண்டர்களுடைய முயற்சி குறைவாகவே இருக்கின்றது. இதற்குக் காரணம் இளைஞர்களிடத்தில் தைரியமில்லை என்பது ஒன்று. மற்றொன்று, நம் சகோதரிகள் கல்வியில் பூச்சியமாகவே இருக்கிறார்கள் என்பது. நம் சகோதரிகளைப் படிக்கவைத்துவிட்டால், பிறகு இதைப்பற்றிய கவலை ஒருவருக்குமே வேண்டியதில்லை. சமீபத்தில் டாக்டர் மூஞ்சே அவர்கள் செய்த பிரசங்கத்தில் "ஜாதிக் கொடுமை தொலையவேண்டுமானால், கலப்பு மணம் ஒன்றினால்தான் முடியும்" என்று சொல்லியிருப்பதை ஜாதி ஒழியவேண்டும் என்பவர்கள் மனதில் பதியவைத்துக் கொள்ளுமாறு வேண்டுகிறேன். ஜாதிப்பட்டங்களும், குறிகளும் வாலிப உலகத்தால் எவ்வளவு வெறுக்கப்பட்டிருக்கின்றன வென்பதை நன்கு அறிவேனாகையால், அதைப்பற்றி வற்புறுத்த வேண்டிய அவசியமேயில்லை. ஜாதிவித்தியாசக்கொடுமையை விடப் பாதகமானசெயலாகிய தீண்டாமையைப் பற்றியும் ஒன்று சொல்ல விரும்புகின்றேன். ஆறரைக் கோடி மக்களை இந்நிலையில் இன்னும் கொஞ்சகாலத்திற்குவைத்துக் கொடுமைப்படுத்திப் பார்த்துக்கொண்டிருப்போமானால் கூடியசீக்கிரம் ருஷியாவிற்கு வந்த கதி நமது நாட்டிற்கும் வரப்போகிறது என்பதை எச்சரிக்கை செய்கிறேன். ஏனெனில் "மானமிழந்தபின் வாழாமை முன்னினிது" ஆதலால் அத்தகைய சம்பவம் நேருமானால் ருஷியாவைப் போலவே வாலிப உலகம் அவர்களோடு சேர்ந்துவிடும் என்பதை உறுதி கூறுகிறேன். ஜாதிக் கொடுமையையும், தீண்டாமைப் பாதகத்தையும் ஆதரிக்கின்ற கோவில்களை ஒன்று அடைத்து விடவேண்டும் அல்லது இடித்து விடவேண்டும். இன்று ஈரோட்டில் கோவில்கள் 2 மாதங்களாக பூட்டப்பட்டிருந்ததால் அந்த வழியில் சூரிய வெளிச்சமும், காற்றும் தண்ணீரும் நின்றுவிடவில்லை. "நாஸ்திகர்களாகிய" எங்களை நீக்கவேண்டுமானால் பஞ்சபூதங்களும் ஆஸ்திகர்களுக்கு மாத்திரம் உதவி செய்யட்டும். அதைப்பற்றி எங்களுக்கு ஆட்சேபனையில்லை. ஆகவே ஜாதி வித்தியாசத்தையும், தீண்டாமைக்கொடுமையையும் ஒழிக்கவேண்டுமானால் தொண்டர்களாகிய நாம்தான் நடத்திக் காட்டவேண்டும்.

### பெண்கள் விடுதலை.

இனி, பெண்களுடைய நிலைமையோ வெகுபரிதாபகரமானதாய் இருக்கிறது. இதற்குக் காரணம் நம்முடைய மதமும், புராணங்களும்தான். சுவாமி விவேகான

ந்தால், அமெரிக்காவில் "வெற்றிக்கொடி நாட்டப்" பெற்றதும்படிப்பிற்கும் பணத்திற்கும் பெண்களையே தெய்வமாகக் கொண்டதுமான "இந்து" மதத்தில் 20 வயதுக்குஉட்பட்ட விதவைகள் 17,749,796 பேர்கள் என்னும்போது இந்தியாவில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு மிஸ்மேயோ பிறந்தாலும் நான் சந்தோஷத்துடன் வரவேற்பேன். 20 வயதிற்குக் கீழாக உள்ள ஒன்றேமுக்கால் கோடி பெண்கள் மிருகமாக நடத்தப்பட்டு, ஈனப்படுத்தப்பட்டு, ஒடுக்கி அவமானப்படுத்தப்பட்டுவைத்திருக்கும் ஒரு மதத்தை அழிக்காமலிருக்கும் கடவுளோ அதன் சிலைகளோ துண்டு துண்டாக வெட்டிப் புதைக்கப்படவேண்டுமென்று சொல்வது மிகையாகுமா? உடன் கட்டை ஏறுதலை விட சித்திரவதையாகிய இந்தப் பாதகத்தை அரசாங்கத்தார் கவனிக்காதிலிருந்து நமது சமுதாய முன்னேற்றத்திற்கு அவர்கள் தடையாயிருக்கிறார்கள் என்பது தெளிவாகின்றதல்லவா? "மதத்தில் தலையிடமாட்டோம்" என்றும், "ஒரு சாரார் எதிர்க்கிறார்கள்" என்றும் சொல்வார்களானால் அது வேண்டுமென்றே சொல்லுகிற அயோக்கியத்தனமான வார்த்தையென்றுதான் சொல்லுவோம். உடன் கட்டையை நிறுத்தினபோது எதிர்ப்பு இல்லாமலா இருந்தது? எனவே, விதவைகளின் துயரத்தை நீக்கவேண்டியது வாலிப உலகம் ஒன்றுந்தான் முடியும். இளம் விதவைகளிருக்கும் நாடு என்ற அவதூறும், அதனால் ஏற்படும் பலனும், அவமானமும இளைஞர்களாகிய நமக்குத்தான் என்பதை மும்முறையும் சொல்லுகிறேன்.

இனி, கற்பு என்னும் பெயரால் பெண்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை ஒழிக்கவேண்டியதும் நம்முடைய கடமையேயாகும். ஆண், பெண் இருபாலருக்கும் சமமான சட்டம் சமமான நியாயம் இருக்கவேண்டிய அவசியத்தையும் நன்கு அறிவீர்கள். கற்பு என்னும் பதத்திற்கு இப்போதிருக்கும் அர்த்தமாகிய அறிவின்மை என்பது நீக்கி அதற்குப் புதிய அர்த்தம் கற்பிக்கவேண்டும். பழைய சோற்றுக்கு விசிறி வீசுகிற கற்பும், முக்காடிட்டு மூலையிலிருக்கும் கற்பும் கொண்ட அடிமை நிலை நமது நாட்டைவிட்டு ஒழிந்ததுப் பகுத்தறிவோடு கூடிய சுதந்திர நிலை கொண்ட கற்பு ஏற்படவேண்டும். நம்முடைய சகோதரிகளைக் கோவில்களில் ஆடவிட்டு சாமியையும் மதத்தையும் காப்பாற்றுவதை விட்டுவிட்டு, சாமியிலும் மதத்திலும் அக்கரையுள்ளவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களை ஆடச் சொல்லும்படி மறக்காத வழியில் புத்தி கற்பிக்கவேண்டும்.

பிரஜா உற்பத்தி மட்டுப்படுத்தல்

பிறநாட்டில் முக்கியமாகப்பார்ப்பனரல்லாதமக்களில் ஏழைகள் படுந்துயரத்தை அறிந்த நாம்பிரஜா உற்பத்தித் தடைக்கு (Birthcontrol) வேண்டியவழிகளை நூல்கள் மூலமாகவும், சொற்பொழிவுகள் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துக்காட்டி அதனுடைய நன்மைகளைப் புகட்டவேண்டும்.

ஞாபகச் சின்னம்.

பார்ப்பனரல்லாத் பெருங்குடி மக்களாகிய நமக்குத் துரோகம் செய்தவர்களுடைய சிலைகளையோ, படங்களையோ, புராணங்களையோ, நூல்களையோ இன்னும் எல்லா சின்னங்களையும் நாம் வெறுக்கின்றோம் என்பதை எந்த வகையிலேனும் நமது விரோதிகளுக்கு அறிவுறுத்தவேண்டும். சுருங்கச் சொல்லுமிடத்து, தினந்தோறும் பதினாயிரக்கணக்கான நமது மக்கள் அயல்நாட்டிற்குப் போகின்றதற்குப் பதிலாக நமது அறிவு இயக்கத்திற்கு விரோதமான கூட்டத்தார்களை ஏற்றுமதி செய்துவிட வேண்டும். இவைகளில் அரசாங்கத்தையோ, அல்லது தனிப்பட்ட நபர்களின் உதவியையோ எதிர்பார்ப்போமானால், நாம் அடிமைக்குழியினின்றும் மீளப்போவதே இல்லையென்பது உறுதி. தாமாகவே வருகின்ற உதவியை நாம் மறுக்கப்போவதில்லை. ஆனால், பிறரை எதிர்பார்த்துச் செய்யவேண்டுமென்றால் திரு. காந்தியை எதிர்பார்த்து ஒத்துழையாமை நடத்திய பலனை இந்தியா அனுபவிப்பது போல்தான் என்பது ஞாபக மூட்டுகிறேன். அதுபோலவே சுயமரியாதை இயக்கத்தின் பலனை மக்கள் அனுபவித்து முன்னேற வேண்டுமானால் இவ்வுணர்ச்சி ஒடுங்கி அழியாமலிருக்கவேண்டுமானால் எந்த தனிப்பட்ட நபருடைய உதவியையும் தயவையும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

முடிவாக, சகோதரர்களே! ஒரு முக்கிய விஷயம். இற்றைக்குச்சரியாய் 2396 ஆண்டுகளுக்குமுன் கிரீஸ் தேசத்தில் நமது சுயமரியாதைத்தலைவரைப் போன்று தோன்றிய பெரியாராகியவரும், எனக்கு குருபோன்றவருமாகிய சாக்ரட்டீஸ் (Socrates) என்பவரைப்பற்றிச்சொல்லாமல் இதைமுடிக்க மனம்வரவில்லை. கடவுள்களைப்பொய்யென்று சொன்னதற்காகவும், மதத்தில் சீர்திருத்தம் செய்ததற்காகவும், வாலிபர்களைச் சேர்த்துக் கொண்டு புதிய உணர்ச்சியில் ஈடுபடும்படி செய்ததற்காகவும், அவர் வாலிபர்களைக்கெடுக்கவந்தவர் என்று வைதீகர்களால் குற்றஞ்சாற்றப்பட்டு, மரணதண்டனை விதிக்கப்பட்டு விஷம் அருந்தச்செய்தபோது, அதைச்சந்தோஷமாக வாங்கி அருந்தி உயிர் நீத்த அந்தப்பெரியாருடைய ரத்தத்தைப்போன்ற வீர உணர்ச்சி உடைய ரத்தம் உங்கள் ஒவ்வொருவர் உடம்பிலும் ஓடவேண்டும். உயர்திரு சாக்ரட்டீஸ் 69-வதுவயதில் தனது உயிரை தியாகஞ்செய்யத் தயாராயிருந்தது போல் நாமும் தயாராய் இருக்கவேண்டும். மற்றவை முடிவுரையில்.

## நன்கொடைகள்.

கீழ்க்கண்ட கனவான்கள் தங்கள் இல்லங்களில் நிகழ்ந்த பார்ப்பனீய மொழிந்த விசேஷ நிகழ்ச்சிகளை முன்னிட்டு அனுப்பியுள்ள நன்கொடைகளை அன்புடன் வரவேற்று நன்றி செலுத்துகிறோம்.

திரு. S. சுப்பையா பிள்ளை
விக்கிரம சிங்கபுரம் ரூ 1—0—0.

திரு. ஆ. க. வயிரவ நாடார்.
கிருங்காகோட்டை ரூ 1—0—0


## ஒரு விதவைப்பெண் தேவை.

கொங்குவேளாள குலத்ததிதவரும் 30 வயதும் உடல்நலமுமுள்ளவரும், மாதம் 75 ரூபாய் வருவாய் உள்ளவரும், ஆகிய ஒருவருக்கு பிள்ளைப்பேறு இல்லாமையால் இளையதாரமாக ஒரு கொங்குவேளாள குலத்துதித்த ஒரு இளம் விதவைப்பெண் தேவை. மனமுள்ளோர் கீழ்க்கண்ட விலாசத்துக்கு எழுதவும்.

"கவுண்டர்" , C/o "குடி அரசு" ஈரோடு.


## நோட்டீஸ்.

இதனால் சகலருக்கும் தெரியப்படுத்துகிறதென்னவென்றால்:—

என் கக்ஷிக்காரர்களாகிய ஈரோடு பாங்கர்ஸ் நாராயணதாஸ் மதிராதாஸ் அவர்களுக்கு ஈரோட்டிலிருக்கும் கோவிந்தசாமி நாயுடு மக்கள் மணியம் G. வேணுகோபால் நாயுடு 1, ஸ்ரீனிவாசலு நாயுடு 2, நாராயணசாமி நாயுடு 3 இடையன்காட்டு வலசிலிருக்கும் கொளந்தாக் கவுண்டன் மகன் சின்னப்ப கவுண்டன் என்கிற கருப்பகவுண்டன் 4 இவர்கள் நால்வரும் 2-10-26-உ எழுதிக்கொடுத்திருக்கும் லெட்டர் ஆப் பார்ட்னர்ஷிப் (Letter of Partnership)-ஐ அனுசரித்து 2-6-28-உ ரூ. 3000க்கு (மூவாயிரத்துக்கு) மேல்கண்டவர்களில் வேணுகோபால் நாயுடுவும் சின்னப்ப கவுண்டன் என்கிற கருப்ப கவுண்டனும் ஆக இவர்கள் எழுதிக்கொடுத்திருக்கும் உண்டியல்களுக்கு டியூ தேதியில் தொகை செலுத்தாமல் அசலில்பாக்கி இருக்கும் ரூ. 2000 இரண்டாயிரமும் 31-8-28-உ முதல் 25-1-29 வரையில் ரூ. 3000 க்கும், 25-1-29-உ முதல் ரூ. 2000க்கும் மாதம் ஒன்றுக்கு 100க்கு 0—10—0 (பத்து அணா) வீதம் வட்டியும் சேரவேண்டியிருக்கிறபடியாலும் மேல்கண்ட இருவர்களும் 25-1-29-உயில் தாங்கள் தங்கள் சொத்துக்களை என் கக்ஷிக்காரன் கடன் தீரும் வரையில் பாதீனம் செய்கிறதில்லையென்றும் செய்தால் செல்லத்தக்கதல்லவென்றும் எக்ரிமெண்டு எழுதிக்கொடுத்திருப்பதாலும் ஷை நால்வரிடமும் எதாவது சொத்துக்களைக்கிரயம் முதலியபாதீனங்கள் பெற்றால் என் கக்ஷிக்காரருக்கு விரோதமாக செல்லத்தக்க தல்லவென்று தெரியப்படுத்தப்படுகிறது.

(Sd.) K. S. Krishnaswami Aiyangar,
ஈரோடு, 23-5-29. *Pleader.*


கால் டஜன் ரூபாய் ஒன்றுதான், காப்பிக்குப்பதில்

## ஹேப்பிப் பவுடர்

அஜீரணம், அரோசி, அஜீர்ணக்கும் ஆனால் பித்தம், வெட்டை, நீர்க்கடுப்பு, பலஹீனம் இவைகளை மாற்றும். தாதுபுஷ்டி உண்டாக்கும். அயல் நாட்டுக்கு முன் பணம்.

V P. சார்ஜ் வேறு.

¼ டஜன் டின் ரூ. 1—0—0

½ டஜன் டின் ரூ. 1—12—0

S.V. ராஜப்பா, ஹேப்பி பாக்டரி, பழனி. S.

(4ம் பக்கத் தொடர்ச்சி.)

...டது. இனி இம்மாதிரியான பொய்மைகள் நிற்கமாட்டா.

சிறிதுகாலத்தின் பின் தமிழ் மக்களிற் சிலர் வடமொழி கற்று வல்லவராய் வந்தபோதுதான் ஆரியரல்லாரில் வேதங்களைக் கற்பவர்கள் நாக்கை அறுத்தல் வேண்டும், கேட்டசெவியில் ஈயத்தைக்காய்ச்சி ஊற்றுதல்வேண்டும் என்று இத்தகைய சட்டங்களை ஏற்படுத்தி அவர்களை ஆரியர்கள் துன்புறுத்தத் தொடங்கினார்கள். ஏனெனில் அவர்களுடைய ஆபாசங்கள் பொதிந்த வேதத்தின் புன்மையெல்லாம் புலனாய்விடுமல்லவா? தமிழ் மக்கள் சட்டங்களை மறைத்து, அரசரைக் கைவசப்படுத்தி, தமது மநு நீதியை நிலை நாட்டத் தலைப்பட்டார்கள் ஆரியர்கள்.

ஆரியருள் பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வகுப்புக்கள் ஏற்பட்டிருந்தன. அதிலும் அவர்களுள் கற்றறிந்தவர்களாகிய பார்ப்பனர்கள் அரசர்களாக இருந்த க்ஷத்திரியரைக் கைவசப்படுத்திக்கொண்டு வைசியர்களையும் சூத்திரர்களையும் நசுக்கிவந்தார்கள். அவர்களுக்கென ஏற்பட்ட சட்ட நூலே மநுநீதி நூல். அதில் ஒரே குற்றத்தைச்செய்த பார்ப்பனனுக்கு ஒருவித தண்டனை, க்ஷத்திரியனுக்கு ஒருவிதம் இவ்வாறாக ஏனைய வகுப்புக்களுக்கும் ஒவ்வொரு விதம். இவ்வாறு ஒரு குலத்துக்கொரு நீதி போதிப்பது அந்நூல். அதனை மிகவும் ஒழுங்கான நூல் என அரசர்களைக் கைவசப்படுத்தி ஏற்பாடு செய்தார்கள். இக்காலத்துச் சட்டங்களிற் பெரும்பகுதிகூட ஆரியர் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளன என்றால் அவர்களுடைய தந்திரம் எவ்வாற்றலது? பிற்காலத்திய தமிழ்ப் புலவர்களும் அதனைக்கொண்டு தாம் எழுதும் பாடல்களில் அரசரைப்பற்றி எழுதவேண்டிவந்தால் அவ்வரசர் மனுநீதி தவறாதவர் என்று எழுதத் தொடங்கினர். அறிவின்மை பல்லாற்றாலும் பரவும். அறிவு அவ்வாறு பரவுவது கடினம். தமிழ் மக்களுடைய சட்ட திட்டங்களின் நேர்மையும் மேன்மையும் எவ்வளவு உயர்ந்தன? அம்மேன்மைகளை வேண்டுமாயின் அதில் ஒரு பகுதியாகிய திருவள்ளுவர் நீதி நூலில் விளங்கக் காணலாம். அதனாலே புலவர் சுந்தரம் பிள்ளையும்,

“வள்ளுவர்செய் திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மநுவாதி ஒருகுலத்துக்கொரு நீதி” என்றார்.

ஆரியர்கள் தமிழ் மக்களோடு பழகத்தொடங்கிய போதுதான் புலாலுண்ணல்தவறென உணர்ந்தார்கள். அதனாலேயே தென்னாட்டுப் பார்ப்பனர் யாக காலங்களிற் தவிர ஏனைய காலங்களில் புலாலுண்ணாமலிருக்கின்றனர். வடநாட்டுப் பார்ப்பனரனைவரும் புலாலுண்ணுகின்றனர். அவர்கள் பண்டைக் காலத்தில் தமிழ் மக்களோடு நெருங்கிய போது தமிழ் மக்களால்வெறுக்கப்படுவதை உணர்ந்து தங்களில் சில வல்லவர்களை முனிவர்களாக அனுப்பி அங்கங்கே தங்கி தமது பழக்க வழக்கங்களைப் பல வழிகளிலும் பரப்புமாறு ஏவினர். அவர்கள் அங்கங்கே போய்த் தங்கி யாகங்களியற்றி அவைகளால் தெய்வ அருள் வருகிறதென தமிழ் மக்களை ஏமாற்றதொடங்கினர். அக்காலத்திலே தான் தமிழ் மன்னர்கள் அவர்களைப் பலவாற்றாலும் துன்புறுத்தி அவர்கள் செய்யும் யாகங்களைத் தடைப்படுத்த முயன்றார்கள். அவர்களில் ஒருவனே இராவணேச்சுரன் என்ற தமிழரசன். அவன் மாரீசன் முதலிய வீரர்களை அனுப்பி வேண்டிய தடைச்செயல்களைப்புரிந்து வந்தான். இதனையே விசுவாமித்திர முனிவன் தசரதனிடம் வந்து மாரீசனைப்பற்றிக்கூறியபோது ஆரியனாகிய தசரதன் நடுநடுங்கி இராவணனுடைய பேரைக்கேட்டு புலம்புகிறான். அவ்வளவு கிலி இருந்திருக்கிறது இவ்வாரிய மன்னர் நெஞ்சில். இராவணன் முதலிய தமிழ் வேந்தர்கள் இவ்வாறு ஆரியர்களைத் தடுத்து இடையூறு செய்தது சரியா என்னில், அது மிகவும் சரியே. கொலையிற்கொடியாரை வேந்தொறுத்தல் பயிர்த்தொழிலாளி தனது வயலிலுள்ள பயிர்களைக்கெடுக்கும் களைகளைப் பிடுங்கி எறிவதைப் போலும்.

ஆரியர்கள் கூட்டங்கூட்டமாக இந்தியாவில் வந்து தங்கினரேனும் அவர்களிற் பெரும் பகுதியினர் வடநாடுகளில் தங்கி விட்டனர். தென்னாடுகளில் அவர்களிற் சிலரே அதிலும் பார்ப்பனரே வந்து சேர்ந்தார்கள். அதனாலேயே தமிழ் நாட்டில் ஆரிய வகுப்பினரில் ஏனைய மூன்று வகுப்புக்களும் காணப்படாமல் பார்ப்பன வகுப்பு மட்டும் காணப்படுகிறது. மேலும் வடநாடுகளிலும் மற்றைய வகுப்புக்கள் பிரிந்திராமல் இருக்கிறது. ஏனெனில் அந்நிய நாட்டுக்கு வருபவர்கள் தம்முள் இருக்கிற வேறுபாடுகளை மறந்திருந்தால் மட்டுமே வாழமுடியும். உதாரணமாக இக்காலத்தில் பிறநாடுகளுக்குப் போயிருக்கும் இந்தியர்கள் தம்முள் இந்தியாவிலிருந்த வகுப்புணர்ச்சியை மறந்து ஒன்றுபட்டு வாழ்வதைக் குறிப்பிடலாம்.

ஒன்றுபட்ட தாங்களெல்லோரும் பார்ப்பனர்கள் என்று கூறிக்கொண்டு பண்டை மக்களையெல்லாம் சூத்திரர்கள்என அழைக்கத்தொடங்கினர். உலகத்தில் காணப்படும் மக்களனைவரும் படைப்பவனான பிர்மாவினிடத்திலே தோன்றினவர்கள் என்றும், அவர்களுள் பார்ப்பனர்களே அவனுடைய முகத்திலிருந்து தோன்றியவர்களென்றும், க்ஷத்திரியர் தோளிலிருந்தும், வைசியர் இடுப்பிலிருந்தும், சூத்திரர் காலிலிருந்தும் பிறந்தவர்களென்றும் எழுதிவைத்து மற்றவர்களையெல்லாம் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களென்று நம்புமாறு செய்து நசுக்கத் தொடங்கினார்கள்.

இவ்வாறாக ஆரிய மக்கள் தமிழ் மக்களிடை அநேக தீய பழக்கவழக்கங்களைத் தோற்றுவித்தனர். அதனால் தமிழ் மக்களில் சிலர் சிறு தெய்வங்களின் வழிபாட்டை மேற்கொண்டு, அவைகளுக்கு ஆடுமாடுகளை வெட்டித் தின்று, கள்ளைப் படைத்துக் குடித்து பலவகைப்பட்ட வகுப்புகளாகப் பிரிந்து ஒற்றுமையற்று நிற்பாராயினர். அவர்களுள் சூத்திரர்கள் என்று பார்ப்பனராலே அழைக்கப் பெறுவோர் சிலர் அறிவு வளரப்பெற்று ‘எங்களை எவ்வாறு சூத்திரர் எனலாம்?’ என வினவினால் நீங்கள் சூத்திரர்கள் இல்லை, சற்சூத்திரர்கள் என்பார்கள்; தமிழ் மக்களில் வியாபாரிகளை வைசியர்கள் என்றழைத்து அமர்ந்து பணம் பெறுவாராயினர். சற்சூத்திரர்களுள் மேலும் முரண்படுவோர் ‘சூத்திரராவது, சற்சூத்திராவது?’ என்றால், இல்லை நீங்கள் வைசியர்கள் என்பார்கள். அவர்களல்லரோ வைசியர்கள் என்றால், இல்லை நீங்களும் வைசியர்கள்தான் நீங்கள் பூவைசியர்கள், அவர்கள் கோவைசியர்கள் என்பார்கள். தமிழ் மக்களிற் சிலர் பணம் பெற்ற மக்களாய்ச் செல்வவான்களானபோது அவர்களை நீங்கள் க்ஷத்திரியர்கள் என்று சொல்லித் தம்மைப்போலப் பூணூலும் போடச்செய்வார்கள். விரிக்கிற்பெருகும் இவ்வாறெல்லாம் தமிழ் மக்களிடைச் செய்து வந்த புரளிகள் பல. அப்புரளிகளெல்லாம் தமது நலம் குறித்தனவாகவும் பிறர் தீது குறித்தனவாகவுமே இருக்கும். இவர்கள் பிறரிடமிருந்துபணம் பெறும்போதெல்லாம் அவர்கள் தங்கள்காலில் விழுந்து வணங்கிக்கொடுக்கவேண்டுமென்றும், இல்லையானால் பயனில்லையென்றும் கூறி ஏமாற்றினார்கள். இவ்வாறாக இவர்கள் இந்தியா முழுவதிலுமே மக்களிடைச் சுயமரியாதை உணர்ச்சியை ஒழித்து போமாறு செய்து அடிமை யுணர்ச்சியே மிகுந்து நிற்கும்படி செய்து விட்டார்கள். இந்திய நாடு இக்காலத்திலிருக்கும் மிகவும் கேவலமான அடிமை நிலைமைக்கு இவ்வாரிய மக்கள் நாட்டிலே சுய நலங்கருதிப் பரப்பிவந்த அறியாமையும், குருட்டு நம்பிக்கையுமே காரணமென்று கூறுவது மிகையாகாது. நிற்க,

மேலே கண்ட காரணங்களினாலே ஆரியராகிய வால்மீகியாலே கெட்டவனென்று சொல்லப்படுகிற இராவணன் காணுதியர் அழிவை அகம்பனனால் அறிகிறான். ஆனால் அவன் சூர்ப்பனகை யிடத்தில் முன்தெரியாதவனைப்போல இராமன் யார்? என வினவுகிறானென்று வால்மீகி கூறுவது வியப்பே! இராவணன் மாரீசனை இரண்டாமுறை காணப்போனபோது வால்மீகி கருடனுடைய கதையைக் கூறுகிறார்.

கருடன் ஒரு பெரிய யானையையும், ஆமையையும் தூக்கித்தின்றதாம்! இது விண்ணுலகத்துக்குப்போய் அமுதத்தைத் தூக்கி வந்ததாம்! இக்கருடன் திருமாலின் சிறந்த வூர்தியாம்! கருடனைப்பற்றி இக்கதையை அறிஞர்யாரே மதிப்பர்? ஆரியர் தம் வரலாறுகள் மிக அழகுடையன! உலகத்திலுள்ளஉயிர்ப்பிராணிகளையெல்லாம் கடவுள் மனிதனுக்காகவே படைத்தார் என்னுகின்றதன்றோ அவர்களுடைய மநுநீதிநூல்? இதனை அயோத்தியா காண்டத்தில் எடுத்துக் காட்டியுள்ளோம். உலகத்தையெல்லாம் காக்கும் கடவுளாகிய திருமாலின் வூர்திக்குப் பசியெடுத்து உயிர்களை வதைத்ததென்பது வியப்பே! இக்கருடனின் ஏனைய செயல்களையும் ஆராய்வோம்.

கருடன் தனது பாரத்தைத் தாங்காது ஒடிந்த கிளை, எங்கே கீழே தவம் செய்கிற முனிவர்கள் மேல் விழுந்து விடுமோ என மனமிரங்கியதாய் அக்கிளையைத் தூக்கிச்சென்றதாம்! இவ்வளவு அருள் நிரம்பிய சிந்தையையுடைய கருடன் அக்கிளையை வேடர்கள் வாழ்ந்த வூரில் போட்டு அவ்வூரையும், அதில் வாழ்ந்த வேடர்களையும் அழித்ததாம். இவ்வளவு இழிந்த மதியையுடைய கருடனை மக்கள் கும்பிடுகின்றனரே! கடவுளைத்தான் கும்பிடவேண்டும். கடவுளுடைய வாகனத்தையும் கும்பிடவேண்டுமோ? இவ்வாரியர்களுடைய கருடவாகனத்தின் பெருமையைப் பாருங்கள்! இக்கருடனை யானை, ஆமை முதலிய உயிர்களைக் கொல்லாமலிருக்கும்படி செய்யவல்லமையற்ற கடவுள் உலகத்தையெல்லாம் காக்கும் கடவுளாம்! ஆரியர் தம் தெய்வங்களுக்கு அமைத்திருக்கும் குணநலங்கள் மிக அழகியனவே! இவர்களுடைய இவ்வறிவற்ற பேச்சை நம்பிக்கொண்டு தமிழ் மக்களிற் சிலரும் கருடனைப் பற்றித் தெய்வவழிபாடு புரிவதோடு, இக்கருடனைப்போல உருவினதாகத் திரியும் வெண்கழுத்துப் பருந்தைக்கண்டு கை கூப்பித்தொழுவதும் அலகில் அடிப்பதும் பார்க்கும் அறிஞர்களுக்கு வியப்பைத் தருகிறது.

இக்கருடன் முனிவர்களைமட்டும் உயிர் என்றும், வேடர்களைக் கல் என்றும் எண்ணியது போலும் இம்முனிவர்கள்கருடனுக்குச்செய்த நன்மையென்ன? வேடர்கள் செய்த தீமையென்ன? இவ்வேடர்கள் அது உண்ணும் சோற்றில் மண்ணையா வாரிப்போட்டார்கள்? என்ன அக்கிரமங்கள்? இவ்வக்கிரமங்களைக் கூறும் நூல் தெய்வ நூல். இவ்வக்கிரமங்களை இத்தெய்வ நூல்களிலிருந்து—தெய்வநூல் எடுத்துக் காட்டுகிறவர்கள் கெட்டவர்கள். மேன்மைத் தமிழ் மக்களே! இனியாவது உண்மையை உணர்ந்து நன்மையைக் கடைப்பிடியுங்கள். உங்கள் உயர்ந்த சிந்தையில் இன்னும் மயக்கமும், இவ்வற்பத்தனமான வழிப்பாடுகளும் பொருந்தி யிருக்கவேண்டாம். இனியாவது விழித்துக்கொண்டு உங்கள் முன்

## கவனிப்போர் இல்லையா?

பொருளீட்டுவான்கருதி இந்தியாவினின்றும் மலாயநாட்டிற்கு வந்திருப்பவர்கள் பலர். அதில் பொருளுடன் வந்து பொருள் தேடுபவர்களைப்பற்றியும் உத்தியோகமுறையில் பணம் சம்பாதிப்பவர்களைப்பற்றியும் நமக்குக் கவலையில்லை.

பிறநாட்டினர்கள் இந்தியாவின் பணத்தை கோடிக்கணக்காக சாப்பிட்டு ஏப்பமிட்டுக்கொண்டிருக்க, இந்தியாவிற்பிறந்த ஏழைமக்கள் பலர்சோற்றுக்கு வழியின்றி ரப்பர் மரங்களில் காய்ந்துத் தொங்கிக்கொண்டிருக்கின்ற காசு பணங்களைப்பறித்து மடியிற் கட்டிக்கொண்டு வந்துவிடலாமெனப் புரட்டர்கள் சொல்வதை உண்மையென நம்பி அவாவுற்று வந்து ரப்பர் தோட்டங்களில் துன்புறுபவர்களைக் குறித்தே பெரிதும் இரங்கவேண்டியதிருக்கின்றது.

தோட்டங்களில் வேலைபார்த்து வாங்குகின்ற சம்பளத்தில் மீதம்வைத்து ஊதியத்தோடு பிறந்த நாட்டிற்குச் செல்பவர்களைப் பார்ப்பதுமிக அரிதே.

ஏனெனில், தோட்டங்கள் தோறும் தவறாமல் கள்ளுக்கடைகளிலிருப்பதால் ஏழைக்கூலிகள் காலையிலிருந்து மாலைவரை உழைத்து வாங்கும் பணத்தில் முக்காற்பங்கை கள்ளுக்கடையில் கொடுத்து நாள்தோறும் நன்றாகக் குடித்துவிட்டு ஒருவருக்கொருவர் வீண்வம்புகள் வளர்த்து சண்டைசெய்து மண்டைகளை உடைத்துக்கொண்டு சிற்சில சமயங்களில் கத்திகளால் குத்திக்கொண்டும் கதறுவதுமல்லாமல் குடித்ததுபோக எஞ்சிய பணத்தையும் தங்கட்கேறியிருக்கும் வெறியின் மயக்கத்தின் மடமையால் கீழே எறிந்துவிட்டும் செல்லுகின்றனர். முறையாக உணவுயாதும் உட்கொள்ளாமல் நாடோறும் குடிப்பதால் உடல்வலிவற்றும் ரப்பர் மாத்தின் சூட்டைத்தாங்கயியலாதுநோய்வாய்ப்பட்டு அல்லலுற்றும் தெருக்கள்தோறும் சோற்றுக்கலைந்து சோம்பேறிகளாய்க் காலங்கழித்து இந்நாட்டிலேயே உயிர்துறப்பவரும் சிலர்.

உலகமெங்கணும் குறிப்பாக மேனாட்டவர்களுங்கூட மது வருந்துதல் மடமையென நீக்கிவரும் இக்காலத்தில் இம் மலாயநாட்டில் தோட்டங்கள்தோறும் ஏழைமக்கட்கென தனிப்பட்ட கள்ளுக்கடைகள் இருந்து வருவதை யோசிக்கும்போது மிக வருத்தமாயிருக்கிறது.

தோட்டங்களை வைத்திருக்கின்ற சொந்தக்காரர்களும் அவற்றை நடத்துகின்ற ஏஜண்டுகளும் இனியாவது ஏழைமக்கள்பால் கிருபை கூவத்து தங்கள் தங்கள் தோட்டங்களிலுள்ள கள்ளுக்கடைகளை எடுத்துவிடுவதோடுமல்லாமல் நோய்வாய்ப்பட்டவர்களை தெருக்கள்தோறும் அலையவிடாமல் குணம் செய்வித்து தந்தாய்நாட்டிற் கனுப்பிவைப்பார்களானால் அவர்கட்கு மிகவும் புண்ணியமாகவிருக்கும்.

எக்காரணத்திற்கும் பிறநாடுகளை எதிர்பார்க்காமல் மீநலத்தோடும் வாழ்ந்து வருவதற்கு இயல்புள்ள இந்தியாவிற்பிறந்த மக்கள் இம்மாதிரி அல்லற்படுவதைக் கவனிப்போர் இல்லையா? என்று பிறை திரு. சுப. ஆறு. ஆறுமுகன் அறிவிக்கிறார்.

---

(9ம் பக்கத் தொடர்ச்சி.)

லை மூடுபனிபோல் மறைக்கின்றன. நிஷ்பிரயோஜனமென்ற அவமானத்திலிருந்து தப்ப விரும்பினால், இந்தச் சுமையை கூசாமல் வீசி எறிந்து விடவேண்டுமென்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

மனுஷ்ய ஜாதி எப்பொழும் முன்னே நோக்கிச் செல்கின்றது. எப்பொழுதும் விழிப்புடன் புது நிலைக்ன் தேடி மரணத்தை வெல்லுகிறது. ஜகத்துப் பெரிய சிப்பிக்கு வலக்கை போன்றது. உண்மையைக்கெஞ்சி அறிவுச்சுடர் கொளுத்திய வீதிவழியே எல்லா தேசமும் செல்லுகையில் யுகத்திற்கு யுகம் வெற்றிகொண்டு முன்னேறும்போது உலகமுழுதும் எதிரொலி கேட்கத்தக்க ஆரவாரம் நம் காதிலும் கேட்கிறது. ஆசையும் அதன் பின்னே செல்லுகிறது. இந்த மனுஷ்ய ஜாதியுடன் நாம் சம நடையாக செல்லவிரும்பினால் இந்த நம் முதுகுச்சுமையைச் கூச்சப்படாமல் வீசி எறிந்து விடவேண்டும் என்றே சுயமரியாதைக்காரர்கள் சொல்லுகிறார்கள்.

காலத்திற்குமுன் கடவுளடிசேர ஆசைப்பட்டவனைப்போல் குருட்டு நம்பிக்கை என்ற மூடச்சுமையால் முதுகு வளைந்துபோய் தன்னைத் தான் நம்பாத கோழைப்படிப்பால் நம்முடைய ஆண்மையை நசுக்கிப் பழிகேடாகிய ஒருமான வருணாச்சிரம சாதியாசாரங்களினின்று பரஸ்பர அன்பினால் விடுபட்டு முடி தூக்கி தோன்றோத்து நிற்போமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் சுயமரியாதைக்காரர்களைத் தாங்கள் அறிவிலிகளென்று ஏன் சொல்லுகிறீர்கள். தங்கள் படிப்பும், மனச் சாக்ஷியும் இதற்கு இடங்கொடுத்ததை நினைத்துப் பார்த்தீர்களானால் உங்கள் மனம் வெட்கமடையும்.

---

னோர்கள் கொண்ட செவ்விய வாழ்க்கையைக் கைப்பற்ற மூர்த்துங்கள். ஒன்றுபடுங்கள். நீங்கள் என்று இத் தெய்வ வழிபாடுகளை ஒழித்து உங்கள் சிந்தையை கல்லாராய்ச்சிக்கு இடமாக்கிக் கொள்ளுகின்றீர்களோ அன்றே பெருமையை அடைவீர்கள். இனி கம்பருடைய புரளியைக் காணலாம்.

---

சாதிப் பட்டத்தையும், சமயக் குறிகளையும் துறந்தவர்கள் :—

திருவாளர்கள்,
கே. ஜி. கந்தசாமி
தேவாங்கபுரம், செவ்வாய்பேட்டை,
எஸ். கோவிந்தசாமி (பிள்ளை)
கும்பகோணம்.
பி. முருகையன் (நாடார்)
கும்பகோணம்.
டி. ஜி. வெங்கிட்டராம்
தென்னூர், திருச்சி.

சுராபயா—ஜாவா :— திருவாளர்கள். பி. பெருமாள், வி. பி. எஸ். மணியன், என். ஆறுமுகம், வி. டி. ஜெகதீசன், டி. எஸ். ஆர். மாணிக்கம், பி. தண்டபாணி.

---

## செய்தித் திரட்டு.

கோபிசெட்டிபாளையம் தாலூகா, கோங்கர்பாளையம், திரு. K. N. கஞ்சப்ப கவுண்டர் தமது தாயார் ஆண்டுக் கடனை பார்ப்பனீயமின்றி நிறைவேற்றினர்.

ஃ ஃ ஃ

திருச்சி, பீமநகர், பார்ப்பனரல்லாத சமரச சங்கத்தில் 13-5-29-ல் திரு. T. S. சஞ்சீவ அவர்கள் தலைமையின் கீழ் திரு. பகவதியார் 'நமது கடமை' என்பதுபற்றி உபந்யசித்தார்.

ஃ ஃ ஃ

ஈரோடு தாலூகா, மொறட்டுப்பாளையத்தில் 6-5-29-ல் செங்குந்த வாலிபர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

பட்டுக்கோட்டையில் ஜுன் 1, 2 தேதிகளில் மாகாண அகமுடையவர் மகாநாடு கூட்டப்படுமென்று நீடாமங்கலம் திரு. T. சோமசுந்திரம் அறிவிக்கிறார்.

ஃ ஃ ஃ

ராமநாதபுரம் ஜில்லா, முதுகுளத்தூர் தாலூகா, சாயலகுடிக் கிராமத்தில் செந்தமிழ் கலாநிதி விருத்தி சங்கமொன்று 1-5-29-ல் நிறுவப்பட்டது.

ஃ ஃ ஃ

கோட்டாரில் 21-4-29-ல் திரு. சண்முகவேலுக்கும், திரு. கமலம்மாளுக்கும் சுயமரியாதைத் திருமணம் நடத்தப்பட்டது,

ஃ ஃ ஃ

மதுரை தெற்கு வாசல் நாடார் வித்யாசாலை மண்டபத்தில் 10-5-29-ல் 'நாடார் வாலிப சங்கம்' ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

சென்னை ஆதியப்ப நாயக்கன் தெருவில் புரோகரஸிவ் யூனியன் பாடசாலையில் 17-5-29 வெள்ளிக்கிழமை மன்று சுகாதார மந்திரி கனம். எஸ். முத்தையா முதலியார் அவர்கள் அவைத்தலைமையில் ஒரு கூட்டங்கூடி பண்டிட் எஸ். எஸ். ஆனந்தம் அவர்களைச் சென்னை நகர பரிபாலன சபை அங்கத்தினராக அரசாங்கத்தார் நியமனம் செய்ததுபற்றி பாராட்டப்பட்டது.

ஃ ஃ ஃ

திருவண்ணாமலையில் சுயமரியாதைத்தெரு.

10—5—29 தேதியில் நடைபெற்ற திருவண்ணாமலை முனிசிபல் சபைக் கூட்டத்தில் ஷை நகரிலுள்ள "ஆவாரங்காட்டுத் தெரு" என்னும் வீதியின் பெயரை நீக்கி "சுயமரியாதைத் தெரு" என்று வைத்துக் கொள்ளலாம் என்று ஒரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி வைத்த பெருமை நமது சுயமரியாதை வீரர் உயர் திரு. ரா. சோ. நடேசன் அவர்கட்கே உரியதாகும். இம்மாத முடிவுக்குள் திருவாளர்கள். ஈ. வெ. ராமசாமியார், ஜே. என். கண்ணப்பர் முதலானவர்களால் ஷை தெரு திறந்து வைக்கப்படுமென்று ஒரு நிருபர் எழுதுகிறார்,

---

**சுய மரியாதை இழந்து மனிதன்என்று வாழாதே.**

## "பகுத்தறிவு."

கூடிய விரைவில் "குடி அரசு" பதிப்பகத்தாரால் வெளிவரப்போகும் மாதப் பத்திரிகை,

இதில் பகுத்தறிவில் சிறந்த பல அறிஞர்களின் கட்டுரைகளும் 'சித்திரபுத்திரன்' வேடிக்கை சம்பாஷணைகளும் ஏராளமாக வெளிவரும். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்திருக்கின்றனர். வருட சந்தா அணு 0—8—0 எட்டே.

விலாசம்:—

(f) "பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.



## பொங்கலூர் பாடசாலை க்ஷேமநிதிச் சீட்டு.

பொங்கலூர் கம்மகுலப் பிரமுகர்களான திருவாளர்கள், பெரியமுத்து நாயுடு, நா, வெங்கடசாமி நாயுடு, ஆகிய இரு கனவான்களின் பெருமுயற்சியால் பொங்கலூரில் 10000 ரூபாச் செலவில் பாடசாலைக்கட்டிடமும் 5000 ரூபாச் செலவில் ஆசிரியர்கட்கு ஆறு விடுதிகளும் அயலூர் மாணவர்கட்கு ஹாஸ்டலும் கட்டப்பட்டு சுமார் 9-ஆண்டுகளாக ஒழுங்காக ஒரு கமிட்டியின்மூலம் நடைபெற்றுவரும் உயர்தர எலிமெண்டரி கிரேட் பாடசாலையின் விசேஷ அபிவிருத்திக்காக ஒரு க்ஷேமநிதிச்சீட்டு ஏற்பாடு செய்யப்பெற்றிருக்கிறது. கோவை ஜில்லாவில் பொறுப்புவாய்ந்த கனவான்கள் அடங்கிய ஒரு கமிட்டியின்மூலம் இந்தச்சீட்டு நடைபெறுகிறது. எல்லாரையும் ஆதாரவளிக்குமாறு வேண்டுகிறோம்.

சீட்டின் விபரம்.

டிக்கட்டு ஒன்றுக்கு ஒரு ரூபா வீதம் 22 டிக்கட்டுகள் அடங்கியது ஒரு புஸ்தகம். 4550 புஸ்தகங்கட்கு ரூ. 100100 வசூல் செய்யவேண்டும். இதில் செலவு ரூ. 14100 போக மீதி ரூ. 86000 ல் பாடசாலை நிதிக்கு ரூ. 43000 வைத்துக்கொண்டு பிரைஸ் 1-க்கு 6000 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையில் 4306 பிரைஸ்களுக்கு 43000 ரூபாய் கொடுக்கப்படும்:

ஒரு டிக்கட்டின் விலை ரூ. 1—0—0 22 டிக்கட்டுகளடங்கிய ஒரு புஸ்தகம் விற்றவர் ரூ. 20 சபைக்கு அனுப்பிவிட்டு 2 ரூ, கமிஷன் எடுத்துக்கொள்ளலாம். சீட்டு 1929-வரு ஆகஸ்டுமீ 11 உ எடுக்கப்படும். மற்றவிபரங்கட்கு காரியதரிசிக்கு எழுதவும்.

காரியதரிசி

க்ஷேமநிதிச்சீட்டு ஆபீஸ்,
பொங்கலூர். (பல்லடம்வழி)
கோயமுத்தூர் ஜில்லா.



## புதிய
## வட்டிக் கணக்குப் புத்தகம்

இரண்டு வருடகாலம் இடைவிடா உழைப்பால், ராயவரம் காந்தி பாடசாலை தர்ம நிதியை உத்தேசித்து என்னால் கணித்து வெளியிடப்பெற்ற புதிய வட்டிக் கணக்குப் புத்தகங்கள் வாங்குபவர்கள் பலவித வட்டிக் கணக்குகளும் வெகு சுலபமாகப் பார்த்துக்கொள்ளலாம். இம்மாதிரி நூதன முறையில் இது வரை வெளியானதே கிடையாதென்பதை நேரில் பார்ப்பவர்கள் நன்கறிவார்கள். மேற்படி புத்தகங்கள் வாங்குபவர்கள் காந்தி பாடசாலை தர்ம நிதிக்கு உதவிய ஓர் நற்பலனையும் அடைகிறார்கள். இதன் விலை ரூ. 5—0—0.

ஐந்து புத்தகங்கள் ஏக காலத்தில் வாங்குபவர்களுக்கு தபால் சார்ஜ் இனாம்.

வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

சு. கதி. கதிரேசன் செட்டியார்,

புத்தகங்கள் கிடைக்கும் இடங்கள்,

சு. கதி. கதிரேசன் செட்டியார், மானேஜர் காந்தி பாடசாலை, ராயவரம்.
சு. கதி. கதிரேசன் செட்டியார், மூவார், [புதுக்கோட்டை ஸ்டேட்.


## ஆங்கிலம் கற்ற பெண் தேவை.

பிராமணரல்லாத 25 வயதுள்ள ஒரு ஹிந்து (Cast Hindu) வாலிபரை மணம் செய்து கொள்ள வருணாஸ்ரம அதர்மத்தை நழித்த ஓர் ஹிந்து பெண் தேவை.

(1) மணமகன் சென்னை சர்வகலாசாலையில் (Madras University) ஆங்கிலபாஷை ஆராய்ச்சியிலும் இலக்கியத்திலும் எம். ஏ. பட்டமும் (M. A. Honours in Language & Literature) சன்னதும் பெற்றவர். தமிழ் செம்மையாய் தெரியும். வடமொழி (சம்ஸ்கிருதம்) இண்டர் மீடியேட் (எப். ஏ.) வரையிலும் வாசித்து அதன் பரீக்ஷையில் தேர்ச்சிபெற்றிருக்கிறார். ரிவினியூ டிபார்ட்மெண்டில் பப்ளிக் சர்வீஸ் ரூல்களின்படி செலக்ஷன் செய்யப்பட்டு ஒரு ஆபீசர் கிரேடில் இப்போதுதான் காயம் செய்யப்பட்டிருக்கிறார். கிரிமினல் ஜுடிஷியல் டெக்ஸ்டு உட்பட ரிவினியூ டிபார்ட்மெண்டுக்கு வேண்டிய சகல டெக்ஸ்டுகளிலும் தேர்ந்திருக்கிறார். அதிசமீபத்தில் டிப்டி தாசில்தாராக எதிர்பார்க்கப்படுவதுடன் காலக்கிரமத்தில் அதிக நாள் படாமல் டிப்டி கலெக்டர் ஸ்தானத்தைப் பெற தேவையுள்ள விசேஷ வாசிப்பும் வேலைத்திறமை முதலிய யோக்கிதாம்சங்களும் எல்லாம் இருப்பதுடன் போதுமான தருணமும் பெற்று இருக்கிறார்.

(2.) விருப்பமுள்ள மணமகள் 16க்குகீழ்ப் படாமலும், 20வயதுக்கு உட்பட்டும் இருக்கவேண்டும். திடசரீரமும் ரூபலாவண்யமும் அன்பும் பொருந்தி இருக்கவேண்டும். குடும்ப சிக்கனமும் இந்தியமாதர்களுக்கு இன்றியமையாத, குடும்ப மனேஜ்மெண்டை பொறுப்புடன் வகிக்கும் திறமையும் வாய்திருக்க வேண்டியதுடன், இங்கிலீஷில் உத்தியோகப் போட்டிக்கு வேண்டிய அளவுக்கு பரீக்ஷையில் தேர்ச்சியில்லாவிட்டாலும், உலக காரியங்களுக்கும் வாழ்க்கைத்துணைக்கும் தன் கணவனுக்கு கற்புள்ள காதலியாய் இருக்கவேண்டும். போதுமான நிறைந்த இங்கிலீஷ் வாசிப்புஇருக்கிறதா என்பதை முக்கியமாய்க் கவனிக்கப்படும். சங்கீதத்தில் அதிக விற்பத்தி இல்லாவிட்டாலும் சாமானிய பயிற்சியும் ஞானமும் கருவிகள் மூலமாவது வாயாலாவது பாடக்கூடிய ஞானமும் இருந்தால் நலமாயிருக்குமென்று விரும்பப்படுகிறது. விருப்பமுள்ளவர்கள் அடியில்கண்ட விலாசத்திற்கு கவரில் எழுதவும்.

கவனிப்பு:—

(1) வரும் கடிதங்கள் பிறர் பார்வைக்கு வெளிப்படாமல் காப்பாற்றி வைக்கப்படும்.

(2) இதில் கண்ட கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் பூர்த்தியான பதிலில்லாமல் எழுதும் கடிதங்களுக்கும் அநாவசியமான கேள்விகளுக்கும் பதில் கிடைக்காது.

(3) அவசியமுள்ள விபரங்கள் தேவையானால் பின் விவரமாய் எழுதப்படும்.

சீர்திருத்தப்பிரியன்
C/o
மானேஜர் "குடி அரசு"
ஈரோடு.

Page numbering incorrect.

## பொருள் செய்வகை.

1 உங்கள் வியாபாரத்துக்கு எவ்வளவு முதல் வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியுமா?
2 வாடிக்கைக்காரர்களைச் சேர்க்கும் விதம் அறிவீர்களா?
3 வியாபாரத்தில் எதெந்த காரணத்தால் எவ்வளவுபேர் நஷ்டமடைந்திருக்கிறார்களென்பது தெரியுமா?
4 வியாபாரத்தில் சித்தி அடையும் விதமென்ன?
5 புக்கீப்பிங் (கணக்கு வைக்குமுறை) ஒற்றைப்பதிவு இரட்டைப்பதிவு உங்களுக்குத் தெரியுமா?
6 துணிந்து செய்யும் வியாபாரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் எவை?
7 தினுசுகள் விலை ஏறுவதும், இறங்குவதும் முன்னால் அறியும் விதம் எப்படி?
8 கடை வைக்குமிடம் எது?
9 முதலில்லாமல் என்ன வியாபாரங்கள் செய்யலாம்?
10 நம்முடைய செயல் இன்னவை என்றும் ஈசுரச்செயல் இன்னவை என்றும் உங்களுக்குத் தெரியுமா?

இத்தமாதிரி நூற்றுக்கணக்கான நூதன விஷயங்கள் இப்புத்தகத்தில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் உதவியால் ஏராளமான திரவியம் சம்பாதிக்கலாம். இதன் விலை ரூபாய் ஒன்றுதான். விலாசம்:—

தேவி ஆஸ்ரமம், திரௌபதை அம்மன் கோவில் வீதி, புதுச்சேரி.

கவனியுங்கள்! நல்ல லாபம்!

PHOTO HAND CAMERA.



ரொம்பவும் குறைந்த விலை ரூ-ா 2—15—0.

நண்பர்களே! மேலே சொல்லிய காமிரா லண்டனில் புதிதாகச் செய்யப்பட்டது. இந்த காமிராவை வாங்கி நூறு நூறாகப் பணம் சம்பாதிக்க ஆரம்பித்து விட்டனர். போட்டோவின் அளவு 3 x $2\frac{1}{2}$ ஆகும். காமிராவைச் சேர்ந்த எல்லா சாமான்களுடனும் அனுப்பப்படும். சில நாளைக்கு மட்டும் எங்களுடைய அசல் விலை ரூபாய் 2—15—0 க்கு [illegible] கொடுக்கப்படும். உடனே எழுதுங்கள்.

(4) கானாடியான் வாட்சு கம்பெனி, ஜி. டி., மதராஸ்,

நீயேன் கணக்கில் குணமடைவதை விட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

அபூர்வ சிகிச்சை! இதை—சாதனைசெய் அச்சரிய நிவர்த்தி!!

### சுவாச காச ரோக நிவாரணி

### Instant Relief for Asthma.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாசகாச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, ஜலம், மார்ச்சளி, நெஞ்சுவலி, தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, காரமப்பு [illegible], வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயு, [illegible], நாசியிழுப்பு, [illegible], குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்துமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்தி செய்வதுடன் இரத்தத்தை சுத்தி செய்தும், கெட்டியான கபத்தை இளகச்செய்தும், கபத்தை வெளியில் தள்ளிட், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. ஒரு முறை பரீட்சித்து பார்ப்பது அவசியம்.

48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக்கூடிய டப்பா 1 க்கு விலை ரூ. 1—4—0. தபால் கூலி பிரத்தியேகம். பினங், சிங்கப்பூர் முதலிய வெளியூர் வாசிகள் முன் பணம் ரூ. 2—8—0 அனுப்பவேண்டும்.

புரோப்ரைட்டர், மூ. மா. சொக்கலிங்க முதலியார்,
திருநாவுக்கரசு வைத்தியசாலை,
(8) அங்காளப்பன் கோவில் தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0
அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0
மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,
244, தங்கசாலைவீதி, மதராஸ்.
டெலிபோன் 3311-
(4-e) தந்தி விலாசம்:—விகடன், சென்னை.

## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதப்பத்திரிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப் போதிப்பது; 46-பக்கம் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் வைசன் [illegible] மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனாம்.
வருட சந்தா தபாற்கூலி யுள்பட
உள்நாடுகளுக்கு ரூ. 1—0—0
வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0
ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி,
(4-g) மதராஸ்

## [illegible] கோட்டார் [illegible]
### கொள்வலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

கோட்டார் [illegible]
[illegible] மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்
[illegible] கோட்டார்,
[illegible]
(16) மைலாப்பூர், மதராஸ்

## "முன்னேற்றம்."
### இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- லெ. சி. நாராயணசாமி
இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.
விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"
(f) 152, சிலிகிரோட், சிங்கப்பூர்.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.